# போலீஸ் பார்வை

## POLICE PARVAI

மாத இதழ்

நல்ல விதைப்பு நலம் காக்கும் மாகும்

• மலர்-10 • Volume-10 • இதழ்-10 • Issue-10 • ஆகஸ்ட்-2025 • August -2025 • விலை ரூ.15/- • Rs.15/-

POLICE PARVAI NEWS WEB TV E_Book: www.policeparvai.com


## செல்போன் தொலைஞ்சு போச்சா, கண்டுபிடிக்கலாம்..



## IA என்றால் என்ன?

## ROAD SAFETY CLUB மாணவர் அமைப்பை தொடங்கிய கன்னியாகுமரி SP Dr.R.ஸ்டாலின் IPS



## தமிழா! விழித்துக் கொள்..

சிறப்பு பகுதி..



## நகை வாங்க போறீங்களா! அப்ப, இத படிங்க..

## யோகாசனம் தெய்வீக ரகசியங்கள்



உங்கள் உடலின் பாகங்களை பயமுறுத்தாதீர்கள்.

இயற்கை வாழ்வியலும் உடல் நலமும்

www.policeparvainews.com இணைய தளத்தில் செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம்...

ஆகஸ்ட் மாத சிறப்பு பலன்கள்


திருச்சியில் ஓர் இனிய உதயம்!
SR Our Grocery
தரமான மளிகை
மலிவான
விலையில் உங்கள்
இல்லம் தேடி...
ஒரே ஒரு போன் கால்
SR OUR GROCERY
Digital Market @ you're Door Step
No.8, Erumbeeswarar Nagar, Thiruverumbur,
Trichy - 620 013. Tamilnadu.
E-mail:srourgrocery@gmail.cm | Web: srourgrocery.com
9894890808
8610643636


ROLLER
SKATING
7 Star
Sports Academy


AEROSKATOBALL ASSOCIATION OF TAMILNADU
Affiliated to :
AEROSKATOBALL FEDERATION OF INDIA
Aeroskato Ball Association
Tamilnadu
No.8, First Floor, Erumbeeswarar Nagar,
Thiruverumbur,
Trichy - 620 013.Tamil Nadu.
FIT INDIA
Email : aeroskatoballtrichy@gmail.com
Cell : 9943805636, 9003096846

# போலீஸ் பார்வை

ஆகஸ்ட் 2025 மலர் 10 இதழ் 10



**அச்சிட்டு வெளியிடுபவர்** : ஆசிரியர் Dr.N.பாலகிருஷ்ணன்

**ஆன்மீக ஆலோசகர்** : Dr.M.பாலகிருஷ்ணன் சுவாமி

**கௌரவ ஆசிரியர்** : நினைவில்... புலவர் தியாக சாந்தன்

**முதன்மை ஆசிரியர்கள்** : S.முருகானந்தம், K.ராம்சுரேஷ், K.T.சிவக்குமார் B.A.,B.L., மரு.கண்ணன்

**துணை ஆசிரியர்கள்** : N.இளங்கோவன், G.ஹரிகிருஷ்ணன், N.ஜீவானந்தம், B.சம்பத், G.ஸ்ரீனிவாசன், R.வெங்கடேஷ், V.பிரபு, S.சுந்தர்

**இணை ஆசிரியர்கள்** : K.ரவிச்சந்திரன், U.மதனகோபால், K.மனோஹரன், K.K.ஞானேஸ்வரன்

International Legal advisor : **Ramachandran Saravanan B.A.,LLB., D.L.L..,LLM**

**சட்ட ஆலோசகர்கள்** : S.கோபாலமணிகண்டன் B.A., B.L., ML., மதுரை ஐகோர்ட், P.V.பிரகாஷ் B.A., B.L., V.சிவக்குமார் M.A., B.L. சென்னை ஐகோர்ட், Dr.V.S.முகம்மது சலீம் M.A., L.L.B., S.அண்ணாதுரை M.A., B.L., P.பார்த்திபன் M.Com., B.L., M.சபிதா BBA., B.L., S.ரவிச்சந்திரன் M.A., B.L, K.அருணாச்சலம் B.Com., LLB

**சிறப்பு ஆலோசகர்** : S.செயத்அலி B.Sc., LLB.,

**தலைமை நிருபர்கள்** : S.வேல்முருகன், I.சகாயராஜ், P.பிரஸ்டன், I.கண்ணன், N.ஹரிதாஸ், மணிகண்டன் முருகதாஸ், N.ராக்கேஷ் சுப்பிரமணியன், K.கோவர்த்தனகிரி, S.ரமேஷ், A.மாரிராஜா, P.ஜெகதீஷ், M.பாண்டியராஜன், J.ஜெயவேல்முருகன்,

**சிறப்பு நிருபர்கள்** : V.Vivek Bomb, SA.மகாதேவன், N.முரளிதரன், P.முத்துகுமரன், B.பாஸ்கரன், R.சக்திவேல், K.ரவிகிருஷ்ணன், Dr.A.S.முகமது ஹுசேன், M.சசி, P.கௌரிஷங்கர், G.அழகுராஜ், S.மணிகண்டன், J.பீமராஜ், LNK.சந்தன், B.குணசேகரன், R.பழனிச்சாமி, K.பாபு, R.மணிமாறன், M.வெங்கடேசலு, குரு.சரவணன்

**நிருபர்கள் குழு** : G.பாபு, K.ராஜசேகர், S.ராமச்சந்திரன், B.சிவக்குமார், B.சத்தியராஜ், R.சக்திவேல், R.குப்புசாமி, N.ராமசாமி, A.பெனியல்தேவபிரபு, S.சந்திரசேகரன், M.ரகு, N.சீனிவாசன், S.சிவக்குமார், S.ஜெயச்சந்திரன், R.வசந்த், R.விஷ்ணுமோன், D.ஹரிஹரன், V.ஸ்ரீனிவாசராவ், E.பால்ராஜ், C.பாண்டியன், S.பாலமுருகன், K.இந்திரகுமார், A.ஜெயச்சந்திரன், G.சிவப்பிரகாசம், Dr.D.வெங்கடேஷ்வரா, H.நீலகண்டன், J.செல்வம், S.சிந்தாமணி விநாயகர், K.ரகு, U.தியாகராஜன், S.சரவணன், S.சிவராஜ், குஷால் K ஷர்மா, G.சதீஷ்குமார், Dr.S.ஹரிநாராயணன், K.A.சுரேஷ் கிருஷ்ணா, D.திவாகர், T.ஜெயபிரகாஷ், M.மணிவண்ணன், G.ராமமூர்த்தி, S.ஸ்ரீனிவாசன், M.சேகர், V.K.கண்ணன், P.அண்ணாமலை, N.மோஹனா, A.பாலமுருகன், V.சதிஷ், C.விஜயகுமார், D.லெட்சுமணன், R.தியாகராஜன், H.சுஜித்குமார், S.ஆனந்த், R.ராமநாதன், P.கருப்புசாமிபாண்டியன், U.செல்வகுமார், M.ஆனந்தகுமார், K.தங்கராஜ், T.ஆனந்த்குமார், M.முத்துசாமி, C.சிவகுருநாதன், AK.ஷாஜதா, R.கோவிந்தசாமி, P.அசோக்குமார், S.விக்னேஷ், S.நவீன், M.ராஜகோபால், T.ஆலன்பே, B.சையத் முகமது மீரான், P.மணிமாறன், B.ரமேஷ்குமார், P.மஹேந்தர் புரோகித், R.கண்ணன், S.மணி, K.பாண்டியன், A.தண்டபாணி, G.சஜிக்குமார், C.இளங்கோ, V.முருகேசன், S.ஹரிஹரன் (எ) அய்யப்பன், SR.சுந்தரவேலு, L.பிரகாஷ், L.கலைவாணன், V.சண்முகராஜ், M.கவுசர், S.தியாகராஜன், R.சுமதி, A.குமரன், P.சதீஷ், R.ராஜேஷ், K.மாமுண்டிராஜன், M.மாதேஸ்வரன், S.லிங்கதுரை, AR.முருகேசன், R.ஸ்ரீதர், R.ராமலெக்ஷ்மி, R.ராகவேந்திரன், G.சதீஷ்குமார், P.தணிகைவேல், P.நடராஜ், G.நந்தகுமார், S.ஆனந்த்குமார், K.சுரேஷ்குமார், B.பிரேம்குமார், J.ஆண்டன் ஆன்ரூஸ் கிஷோர், G.V.ஜெகதீசன், M.சஞ்சய், V.லெட்சுமணன், P.ஆறுமுகம், A.அலெக்ஸ், B.ஸ்ரீனிவாசன், V.கஜபதி, B.வெங்கடாசலம், P.தேவராஜ், SP.முகேஷ், ஷானவாஸ் அஹமத், A.அப்துல்காதர், முத்து ஜெயசேகர், M.முருகேசன், G.மணிகண்ட பிரபு, A.லியோ கிளமன்ட், S.அன்வர் தீன், L.லூயில் பெர்ணான்டஸ், P.ராஜ ராமகிருஷ்ணன், R.தங்கபாண்டியன், R.கோபாலகிருஷ்ணன், V.ஆறுமுகச்சாமி, M.ஆறுமுகம், M.ரவி, S.சக்திவேல், K.கோபி, K.மாரிமுத்து, P.மணிகண்டன், S.கஜேந்திரவேல், E.கார்த்திக், SP.விமலேஸ்வரன், N.நபிமுகமது, குரு.சரவணன், V.கணேசன், R.வெங்கடேசன், V.ராதாகிருஷ்ணன், A.தாமஸ் அந்தோணி, B,மாரிமுத்து, I.வேளாங்கண்ணி, N.ராஜ், S.ஜானகி, A.மகேந்திரன், S.விக்னேஷ், K.தர்மராஜ்(எ)பாலாஜி, K.S.அசோகன், C.பரமசிவம், R.செந்தில்குமார், A.சரவணன், S.பாலாஜி, S.நவநீத கிருஷ்ணன், K.செல்வ நயினார், K.விமல்ராஜ், R.ஜோதிபாசு, K.சதீஷ்குமார், G.நந்தகுமார், J.மணிகண்டன், S.வெங்கடேஷ்



அலுவலக முகவரி: 4B, GD.Floor, 4th Block Adilti Paradise,
No.1, 2nd North Street, Poombuhar Nagar, Kolathur, Chennai-600 099.
Cell: 9789491438, 7667551542 E.mail: editorpoliceparvai@gmail.com,
Website.www.policeparvai.com



All Rights Reserved Legal Jurisdiction Chennai City Court Only






# நிச்சயமாக பிரதமர் மோடி பெருமை வாய்ந்தவர்

74 வயது நிரம்பிய பிரதமர் தொடர்ந்து 8 நாட்கள் பயணம் செய்ய முடிகிறது. அவரை விமர்சனம் செய்பவர்கள் கவனிக்க வேண்டியது, ஓய்வில்லாமல் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டுக்கு மாறி,மாறி பயணிக்கும்போது, திடீரென மாறும் சீதோஷ்ணம், நாட்டுக்கு நாடு மாறு பட்டுக்கொண்டே இருக்கும் பகல், இரவு. அதனால் உடலிலும் மாற்றம் ஏற்படும். இதையெல்லாம் எப்படி எதிர்கொள்கிறார். எந்த சோர்வும் இல்லாத பயணம் இவற்றைதான்.

மோடியயின் வயதையொத்த மனிதர்களால் இந்த 74 வயதிலும் இப்படிப்பட்ட இடைவிடாத ஓய்வில்லா பயணங்களை மேற்கொள்ள முடியுமா? தன்னுடைய யோகா, ஆத்ம சக்தி, தெய்வீக பலத்தால்தான் சாத்தியம். ஓய்வில்லை, விடுப்பில்லை, மருத்துவ சிகிச்சைக்காக ஒருநாள் மருத்துவமனை சென்ற செய்தி கேட்டதுண்டா?

தொலைதூர விமான பயணம் மேற்கொள்பவர் களுக்கு அதன் கஷ்டம் தெரியும். தொலைதூர பயணங் கள் முடிந்து இந்தியா வந்தவுடன் வேறு ஏதேனும் உள்நாட்டு நிகழ்ச்சிகளுக்கு எப்படி செல்லமுடிகிறது?

சமீபத்திய ஒரு செய்தி, தகவல் அறியும் உரிமை சட்டத்தில் பெறப்பட்ட தகவல். மோடி பிரதமராக பதவியேற்ற 2019-ம் ஆண்டு முதல் பிரதமரின் மருத்துவ செலவுக்கான ஓதுக்கப்பட்டிருக்கும் தொகையில் இருந்து ஒரு பைசா கூட செலவிடவில்லை. மற்ற அரசியல் தலைவர்களுக்கு இடையில் மிக வித்தியாசமான தேச பக்திமிக்க சேவகர். மோடி அவர்கள் மேலும் பல ஆண்டுகள் நம் நாட்டின் பிரதமராக ஆட்சி புரிய வேண்டுமென இந்திய மக்கள் விரும்புகின்றனர்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த தலைவர் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் கங்கைகொண்ட சோழபுரத்துக்கு இராஜேந்திர சோழனின் பெருமையை பறைசாற்றும் விழாவில் கலந்து கொண்டு, கங்கை நீரை கொண்டு வந்து சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்து, தீபஆராதனை காட்டி சுவாமி வழிபாடு செய்தார். பிறகு நடைபெற்ற நிகழ்ச்சியில் மாமன்னர் ராஜேந்திர சோழனின் நினைவு நாணையத்தை வெளியிட்டு அவரின் வீரதீர வரலாறு பற்றி பேருரையாற்றினார். இது தமிழக மக்களின் மனதில் என்றும் நீங்கா இடம்பெறும். தனது உரையை தேவார வரிகளை சொல்லி தொடங்கியது என்றுமே தமிழக்கும் தமிழ் வளர்க்கும் சான்றோருக்கும் பெருமை.

**ஆசிரியர்**

**இதழ் நிர்வாகத்தின் முக்கிய அறிவுறுத்தல்...**

போலீஸ் பார்வை மாத இதழில் இணைந்துள்ள நிருபர்கள், மற்ற பொறுப்பு வகிப்பவர்கள் என, எவரும் எந்த உள்நோக்கத்துடனும் சுய லாபத்திற்காக தவறாக செயல்பட நிர்வாகம் அனுமதிக்காது. மேலும், மீறி செயல்படுபவர்கள் பொறுப்பிலிருந்து நீக்கப்படுவார்கள்.

# யோகாசனம் தெய்வீக ரகசியங்கள்



நம் பாரத தேசம் ஒரு தெய்வீக தேசமாகும். ஆயற்கலை 64-ம் இங்கே தோன்றியது. சித்தர்களும், ரிஷிகளும், யோகிகளும் காளியிடம் இருந்தும், சிவனிடம் இருந்தும் விஷ்ணுவிடம் இருந்தும் அனனைத்துக் கலைகளையும் கற்றுக் கொண்டார்கள். அனைத்தையும் கட்டுப்படுத்தும் கலைகளையும் சித்தர்கள் நன்மைக்காகப் பயன்படுத்தினார்கள். தாங்கள் அனுபவப்பட்டு பயன்படுத்திய கலைகள் அனைத்தையும் சிஷ்யர்களுக்கு கற்றுக் கொடுத்தார்கள். நம்முடைய தெய்வங்களிடம் இருந்து மனதையும்,உடம்பையும் கட்டுப்படுத்தும் கலைகளை சித்தர்கள் கற்றுக்கொண்டார்கள். அவைகளை அஷ்டாங்க யோகம் ஆகும். அஷ்டாங்க யோகத்தை ஒழுங்குபடுத்தி அடுத்த படிக்கு கொண்டு செல்வதே யோகாசனம் ஆகும். இந்த யோகசத்தின் தெய்வீக ரகசியங்களையும், அவைகள் உடம்பையும் மனதையும் நல்ல வழியில் கட்டுப் படுத்துவதையும் பார்ப்போம்.

**யோகம் என்றால் என்ன?**

யோகம் என்றால் கூடுதல் என்று அர்த்தம் பக்குவம் அடைதல் என்றும் அர்த்தமாகும்.ஜீவாத்மா பரமாத்மாவோடு பக்குவம் அடைந்து கூடுதலே யோகம் ஆகும். யோகம் சித்தர்கள் வழி வந்த கலையாகும்.

**யோகாசனம் என்றால் என்ன?**

ஜீவ ஆன்மாக்கள் ஈசனோடு கூடுதலுக்கான இருக்கை நிலையே யோகசனம் ஆகும். ஆசனம் என்றால் இருக்கை என்று பொருள்படும். முழுமனதுடன் ஈசனை நினைத்து இருக்கை என்ற ஆசனத்தில் இருத்தலாகும். இதையே சித்தர்கள் சிவயோகம் என்பார்கள்.

பல ஆயிரக்கணக்கான ஆசனத்தை சித்தர்கள் கூறியுள்ளார்கள். யோகாசனத்தை மனித குலத்திற்கு கொண்டு வந்தவர்கள் சித்தர்களேயாகும்.

**சிவன் வழி நந்தி குரு பாரம்பரியம்:**

சிவனிடம் இருந்து நந்தி அனைத்துக் கலைகளையும் கற்றார். நந்தியிடம் இருந்து அனைத்துக் கலைகளையும் சித்தர்கள் கற்றார்கள். அனைத்துச் சித்தர்களுக்கும் சிவன் வழி நந்தியே குருவாகும். இந்தக் குரு பாரம்பரியத்தை திருமூலர் கூறுகின்றார்.

**திருமூலர் திருமந்திரம்:**

நந்தி அருள்பெற்ற நாதரை நாடிடின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்கிரமர்
என்ற இவர் என்னுடன் எண்வரும் ஆமெ
விளக்கம்:

**நந்தி அருள் பெற்ற சீடர்கள் எட்டுப்பேராகும் இந்த மெய்யாசிரியர்களின் பெயர்கள்**

1.சனகர்
2.சனந்தனர்
3.சனாதனர்
4.சனர்குமாரர்
5.சிவயோக மாமுனி என்ற அகத்தியர்
6.அம்பலக் கூத்தைத் தொழுத பதஞ்சலி
7.வியாக்கிரமர்
8.திருமூலர்

இந்த எட்டுப் பேர்களும் பூமியில் நான்கு திசைகளும் சென்று சித்தர் மார்க்கத்தையும் யோகாசனத்தையும்



உதவி வரைத்தன்று உதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து. (105)

விளக்கம்: ஒருவர் நமக்குச் செய்த உதவிக்குத் திரும்ப நாம் செய்வது, அவர் செய்த உதவியின் காரணம், பொருள், காலம் பார்த்து அன்று; உதவியைப் பெற்ற நம் பண்பாட்டுத் தகுதியே அதற்கு அளவாகும்.

அஷ்டாங்க யோகத்தையும் பரப்பினார்கள்.

பதஞ்சலி முனிவர் சித்தர்கள் யோகத்தை வட பகுதியில் பரப்ப சென்று விட்டார். அதுவே இப்பொழுது பதஞ்சலி யோகமாக இருக்கின்றது. திருமூலர் தென்பகுதியிலே இருந்து கொண்டு அனைத்து சித்தர் கலைகளையும் பரப்பினார்.

அகத்திய மாமுனிவர் வட பகுதிக்கும், தென் பகுதிக்கும் சென்று கலைகளைப் பரப்பினார்கள். மற்ற முனிவர்கள் பூமியின் அனைத்து திசைகளுக்கும் சென்றார்கள். இந்த எட்டுப் பேரின் குருப் பரம்பரையே சித்தர்களின் குருப்பரம்பரையாக பரவியது.

**திருமூலரின் குருப்பாரம்பரிய சீடர்கள்**
**ஏழுபேர் திருமந்திரம்:**

மந்திரம் பெற்ற வழிமுறை மாலங்கன், இந்திரன், சோமன், பிரம்மன், உருத்திரன் கந்துருக் காலங்கி கஞ்ச மலையனோடு இந்த எழுவரும் என் வழ்யாமே.

என்று திருமூலர் தனக்கு ஏழு சீடர்கள் என்று கூறுகின்றார். திருமூலர் சீடர் காளங்கிநாதர் சீடர் போகர் ஆவார்.

இந்த எட்டுப்பேரின் குருபரம்பரைச் சிஷ்யர்கள் அனைத்துப் பகுதியிலும் பரவினார்கள். சித்தர்கள் அனைத்துக் கலைகளையும் சிஷ்யர்களுக்கு கற்றுக் கொடுத்தார்கள். சித்தர்கள் கலையோடு யோகாசனமும் பரவியது. ஈசனோடு கூடும் ஒரு தெய்வீகமான இருக்கையே ஆசனமாகும்.

**திருமூலரின் அஷ்டாங்க யோகம்**

ஈசனை அடையும் படிகளாக திருமூலர் எட்டு யோக நிலைகளைக் கூறுகின்றார்.

1. இயமம்- தீமையை விலக்குதல்
2. நியமம்- நாம் கடைபிடிக்க வேண்டிய ஒழுக்கம்
3. ஆதனம்- ஆசனம்(இருக்க நிலை)
4. பிராணாயாமம்- மூச்சுப்பயிற்சி
5. பிரத்தியாகாரம்- மனதை உள்ளே நிறுத்துதல்
6. தாரணை- மனம் ஈசனோடு நிலைத்திருத்தல்
7. தியானம்- ஈசனை நினைத்து இருத்தல்
8. சமாதி- ஈசனோடு கலந்திருத்தல்

திருமூலர் கூறிய 8 யோகங்களில் மூன்றாவதாக வருவது ஆசனமாகும். இந்த யோகாசனங்கள் எப்படி செய்ய வேண்டும் எந்தெந்த நேரத்தில் செய்ய வேண்டும் அதைப்பயிலும் போது சொல்லும் மந்திரங்கள் என்ன என்பதை திருமூலர் கூறுகின்றார்.

**சித்தர்கள் யோகாசனங்கள்**

சித்தர்கள் 5,000 ஆசனங்களுக்கு மேல் தங்கள் ஓலைச் சுவடிகளில் யோகாசனத்தை கூறியுள்ளார்கள். சித்தர்கள் தவம் செய்யும்போது போதுவாகச் செய்யும் ஆசனத்தை கூறியுள்ளார்கள். போகர் ஆதனம் நாலாயிரம், மச்சமுனி ஆதனம் ஆயிரம், அகத்தியர் சூட்சம ஆதனவர்மம் என்ற நூல்கள் எல்லாம் காலப்போக்கில் மறைத்து விட்டன. இருக்கும் ஆசனத்தை பயன்படுத்தி நாம் நன்மை அடைவோம்.

ஓம் காளி ஓம் நமசிவாய



கருடசித்தர்
Dr.பாலகிருஷ்ண சுவாமி
எரசை, தேனி மாவட்டம்.

**திருமூலர் திருமந்திரம்**

ஆதனம்: ஆசனம்
சுவத்திக ஆசனம்: பாடல்:
பங்கயம் ஆதியந்த பல் ஆதனம்
இங்குளலாம் இரு நாலும் அவற்றினுள்
சொங்கில்லை ஆகச் சுவத்திகம் எனமிகத்
தங்க இருப்பத் தலைவனும் ஆமெ.
தாமரை ஆசனம்-பத்மாசனம்: திருமந்திரம்:
ஓரணை யப்பதம் ஊடுருவின் மேலேறிட்டு
ஆர வலித்ததன் மேல்வைத்து அழகுறச்
சீர்திகழ் கைகை அதனைத் தன் மேல்வைக்கப்
பார் திகழ் பத்மாசமெனல் ஆகுமே.

**விளக்கம்:** ஒரு பக்கம் மடக்கி கால்களை தொடையின் மேல் ஏற்ற வேண்டும். வலபக்க கால் தொடையின் மேல் இடக்காலையும் இதே போல் இடப்பக்க கால் தொடையின் மேல் வலக்காலையும் வைத்து அழகாக கைகளை விரித்தபடி தொடை மேல் பொருந்துமாறு வைத்தால் அந்த அமைப்பானது தெய்வீகம் நிறைந்த தாமரை மலரின் இருக்கை நிலை

ஆசனம் ஆகும். இதுவே பத்மாசனம் ஆகும்.

**பத்திராசனம்: திருமூலர் திருமந்திரம்**

துரிசல் வலக்காலைத் தோன்றவே மேல்வைத்து
அரிய முழந்தாளில் அங்கைகளை நீட்டி
உருகி விடும் உடல் செல்வே இருத்திப்
பரிசு பெறுமது பத்திராசனமே.

கோழி ஆசனம்(குக்குட ஆசனம்) திருமந்திரம்
ஒக்க அடியினை ஊருவில் ஏறிட்டு
முக்கி உடலை முழங்கைதனில் ஏற்றித்
தொக்க அறிந்து துளங்காது இருந்திடில்
குக்குட ஆசன்ம் கொள்ளலும் ஆமெ

சிம்மாசனம்: சிங்க ஆசனம்: திருமந்திரம்:
பாதம் முழந்தாளில் பாணிகளை நீட்டி
ஆதரவோடும் வாய் அங்காந்தி அழகுறக்
கோதில் நயனம் கொடிமூக் கிலே உறச்
சீர் திகழ் சிங்கா தனம் எனச் செப்புமே.

**திருமூலர் திருமந்திரம்: ஆசனம்:**

பத்திரம், கோமுகம், பங்கயம், கேசரி
சொத்திரம், வீரம், சுகாதனம், ஓரேழும்
உத்தமம் மாமுது ஆசனம் எட்டெட்டுப்
பத்தொடு நூறுபல ஆசனமே.

**விளக்கம்:** தெய்வீக ஈசன் நிலை ஆசனம் 12ல் ஏழு சிறப்பான ஆசனமாகும். அவை பத்திராசனம், கோமுகாசனம், பங்கயம் என்ற பத்மாசனம், கேசரி ஆசனம், சொத்திரம்(சுவஷ்தி) ஆசனம், வீராசனம், சுகாதன ஆசனம் என்னும் ஏழு ஆசனங்களும் சிறந்தவையாகும்.

**கோமுகாசனம்: பசுமுக ஆசனம்**

இதுபோல் அனைத்துச் சித்தர்களும் அனைத்துவிதமான ஆசனங்களையும் தன் சிஷ்யர்களுக்கு கற்றுக் கொடுத்து உள்ளார்கள். யோகாசனங்களும் முத்திரைகளும் சித்தர்களிடம் இருந்து மக்களுக்கு வந்தவையாகும்.

**யோகாசனத்தின் நன்மைகள்**

நம் உடம்பின் அனைத்து விதமான உடல் உறுப்புக்களின் அசைவின் அசையா இருக்கை நிலை அனைத்தும் யோகாசனமே. ஒவ்வொரு யோகாசனமும் ஒவ்வொரு நோயைப் போக்கும். யோகாசனம் செய்வதனால் இரத்தம் சுத்தம் அடையும், உடம்பில் உள்ள பிராணக் காற்று சுத்தம் அடையும். உடம்பின் உள்பலவீனங்களும், வெளிப் பல வீனங்கள் அனைத்தும் விலகும். உடம்பில் உள்ள உள் நோய்களும் வெளி நோய்களும் விலகி ஓடும்.தினமும் யோகாசனம் செய்வதால் மனம் அமைதி அடைகிறது. மனது ஒருமுகமாக சலனமில்லாத சிவநிலையைப் பெறுகின்றது. மனச் சோர்வு, தூக்கமின்மை, மனக்கவலை, விரக்தி அதிக கோபம், பகை, வெறி இவை அனைத்தையும் நீக்குகின்றது.



தினமும் யோகாசனம் செய்வதால் நம் உடலும் உள்ளமும் பக்குவம் அடைகின்றது. நம் உடம்பில் உள்ள பஞ்சமா பாதகங்களும் விலகுகின்றது. தீய எண்ணங்கள் விலகி மனதை உயர்ந்த நிலையில் அமைதியாக வைக்கின்றது. நம் எண்ணங்கள் குறுகிய வட்டத்தில் இருந்து வெளிவந்து பரந்த வெளியை சுவாசிக்கின்றது. அப்பொழுது நம் மனது யோகாசனத்தினால் தெய்வீக அமைதியை அடைகின்றது. அனைத்து விதமான தீய வெறிகளும் நம்மை விட்டு விலகுகின்றன. நாம் விரும்பிய தெய்வங்களை நினைத்து யோகாசனம் செய்யும் போது நம் ஆன்மா உயர்ந்த நிலையை அடைகின்றது.

மனிதர்களின் மன அழுத்தம் விலகி நம் மனம் அனைவரிடமும் அன்பாக பழகும் சகிப்புத் தன்மையை பழகிக் கொள்கின்றது. நாம் யோகாசனம் செய்வதனால் பல ஆயிரக்கணக்கான நன்மைகள் நம் உடலுக்கும், உள்ளத்துக்கும் உண்டாகின்றது.

**யோகாசனத்தின் வகைகள்**

1. கணபதி ஆசனம்- விநாயக ஆசனம்
2. பத்மாசனம்
3. சித்தாசனம்
4. சூரிய நமஸ்காரம்
5. கோமுக பச்சி மோத்தாசனம்
6. மரீசாசனம்
7. ஜானுசீராசனம்
8. சதுர கோணாசனம்
9. பத்த கோணாசனம்
10. உத்தித ஹஷ்த பத்மாசனம்
11. பக்காசனம்
12. கர்ப்பாசனம்
13. குக்குடாசனம்
14. உத்தித பத்மாசனம்
15. வீரயோகமுத்ரா
16. நாடிசுத்தி பிராணாயாமம்
17. பிராணாசனம்
18. கோரக்காசனம்
19. பர்வதாசனம்
20. பத்ராசனம்
21. பத்ம கோண உஜ்ஜயி
22. பத்ம கபாலபாதி
23. பத்ம உஜ்ஜயி



24. பக்த பத்மாசனம்
25. பிரம்பச்சர்ய முத்ராசனம்
26. அர்த்த உத்திரபாதாங்குஷ்தாசானம்
27. உத்தித பாதாங்குஷ்தாசனம்
28. சாக்கோராசனம்
29. ஏக உட்கட்டாசனம்
30. உட்கட்டாசனம்
31 .அத்தோதித பரிவர்த்த பாதாஜனுசீராசனம்
32. அர்த்த உத்தித பாதஜானுசீராசனம்
33. அர்த்த உத்திர பட்சி மோத்தணாசனம்
34. உத்தித பட்சி மோத்தனாசனம்
35. பாரிகாசனம்
36. பரிவர்த்த ஜானுசீராசனம்
37. துவிபாத விருஷ்டிராசனம்
38. சம கோணாசனம்
39. அஷ்ட கோணாசனம்
40. விருஷ்டிராசனம்
41. ஏக துலாங்குலாசனம்
42. துலாங்குலாசனம்
43. பூர்ண ஏக துலாங்குலாசனம்
44. விபரீத கஷ்டாசனம்
45. ஜானு காசியாசனம்
46. காசியாசனம்
47. பட்சி மோத்தாசனம்
48. அர்த்தபாத பட்சி மோத்தனாசனம்
49. உஜ்ஜயி
50. கபாலாபாதி
51. அர்த்த ஜடாரபரிவர்த்தனாசனம்
52. ஜடார பரிவரிவர்த்தனாசனம்
53. குராஞ்சாசனம்
54. அக்காண தனுராசனம்
55. உதித்தகாடி ஜக்கிய பாத சக்ராசனம்
56. ஆனந்தாசனம்
57. ஏகநவாசனம்
58. சிரநவாசனம்
59. நவ ஆசனம்
60. வஜ்ரோலி முத்ராநவாசனம்
61. ஏக அர்த்த ஹலாசனம்
62. துவிபாத பீடாசனம்
63. அர்த்த ஹலாசனம்
64. சக்கரவாகனாசனம்
65. ஏக உத்தான பாத ஆசனம்
66. உத்தான பாத ஆசனம்
67. விபரீத கரணி ஆசனம்
68. சர்வாங்க ஆசனம்
69. பரிவர்த்த கபாத சர்வாங்காசனம்
70. ஏக பாத சர்வாங்காசனம்
71. சர்வாங்க முழு திரிகோணாசனம்
72. சர்வாங்க அர்த்த பத்மாசனம்
73. சலம்பசர்வாங்காசனம்
74. நிரலம்ப சர்வாங்காசனம்
75. உத்தித பாத சிரஜக்கிய சத்ராசனம்
76. சர்வாங்க வானப்பாடி யாசனம்
77. சர்வாங்க ஊர்த்வ பத்மாசனம்
78. சர்வாங்க பத்ம கவையாசனம்
79. சர்வாங்க அஷ்வினி முத்ராசனம்
80. அர்த்த பர்வதாசனம்
81. பர்வதாசனம்

இதுபோல் பல ஆயிரக்கணக்கான யோகாசனங்களை நாம் சொல்லிக் கொண்டே போகலாம். இவைகள் அனைத்தும் நம் சித்தர்களாலும் ரிஷிகளாலும் யோகிகளாலும் மக்கள் நன்மைக்காக அவர்களால் நமக்கு அருளப்பட்டது. மனித குலத்தை நல்வழிப்படுத்தவே அனைத்துக் கலைகளையும் நம் சித்தர்களும் ரிஷிகளும் பயன்படுத்தினார்கள்.

**தெய்வீக யோகாசனம்**

நாம் யோகாசனம் செய்யும்போது தெய்வங்களை நினைத்து தெய்வ மந்திரங்களை சொல்லியும் பக்தியோடு யோகாசனம் செய்யும் போது நாம் செய்யும் யோகாசனம் பூரண நிலையை அடையும். நாம் எதற்காக யோகா செய்கின்றோமோ அந்தக் காரியம் ஈடேறும். நாம் செய்யும் ஒவ்வொரு யோகாசனமும் ஒவ்வொரு நோய்களைத் தீர்க்கும்.

நம் சித்தர்கள் கொடுத்த பொக்கிஷமாக யோகா கலைகளை நாம் நம் வாழ்வில் அனுதினமும் கடைபிடித்து நம்முடைய உடம்பையும் ஆன்மாவையும் உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்வோம்.

# 2025 ஆகஸ்ட் மாத சிறப்பு பலன்

சுக்கிரன் மிதுன ராசிக்கு பெயர்ச்சியாகியுள்ளார். குரு ஏற்கனவே இந்த ராசியில் அமர்ந்துள் ளதால் சுக்கிரன் மிதுன ராசியில் குருவுடன் இணைகிறார். அழகு, செல்வத்தில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டால், அது சுக்கிரனால் தான். கடக ராசியில் இருந்து மிதுன ராசிக்கு பெயர்ச்சி ஆகியுள்ள நிலையில் சுக்கிரனின் இந்த மாற்றத்தால் பெரும் பலனை அடையப் போகும் சில ராசிகளுக்கு ஜாக்பாட் அடிக்கும், பொற்காலம் துவங்கும் சுக்கிர கிரகம் செல்வம், அன்பு, அழகு மற்றும் பொருள் இன்பங்களுக்கு அள்ளித் தரும் கிரகமாகும். அந்த வகையில் வருகிற சுக்கிரன் ரிஷபத்தில் பெயர்ச்சி அடையப் போகிறார், ரிஷபத்தில் சுக்கிரனின் பெயர்ச்சி சில ராசிக்காரர்களுக்கு மிகவும் சாதகமானதான பலனைத் தரும், இது அந்த ராசிக்காரர்களின் வாழ்க்கையில் நேர்மறையான மாற்றங்களைக் கொண்டுவரும். பண மழை பொழியும், தொழில் வாழ்க்கையில் முன்னேற்றம் இருக்கும்.

சுக்கிரன் பூர நட்சத்திறத்திற்கு மாறுகிறார். சுக்கிரனின் இந்த நட்சத்திர மாற்றத்தால், அனைத்து ராசிக்காரர்களும் தங்கள் வாழ்வில் சிறப்பான பலன்களைப் பெற வாய்ப்புள்ளது. சுக்கிரன் பூர நட்சத்திரத்தில் நுழைவதால், குறிப்பிட்ட சில ராசிக்காரர்களுக்கு அதிர்ஷ்டம் உண்டாகும். அவர்கள் எந்தெந்த ராசிக்காரர்கள் என்று இந்த பதிவில் தெரிந்து கொள்ளலாம்.

**மிதுனம்**

பூர நட்சத்திரத்தில் சுக்கிரன் சஞ்சாரம் மிதுன ராசிக்கு மூன்றாம் இடத்தில் நடக்கப் போகிறது. மிதுன ராசிக்காரர்களுக்கு இந்த நேரம் மிகவும் அதிர்ஷ்டமானதாக இருக்கும், மேலும் அவர்களின் நல்ல முயற்சிகளுக்காக பணியிடத்தில் பாராட்டுகளைப் பெறலாம். உங்களின் செயல்திறன் காரணமாக மேலதிகாரிகள் உங்களுக்கு பதவி உயர்வு அல்லது சம்பளத்தை உயர்த்தலாம். வேலை நிமித்தமாக சுற்றுலா செல்ல நேரிடலாம், வியாபாரம் செய்பவர்கள் அதிக லாபம் ஈட்டுவார்கள். இந்த காலகட்டத்தில் எல்லாத் துறைகளிலும் பலன்களைப் பெறுவார்கள்.

உங்கள் திருமண வாழ்க்கையில் பிரச்சனைகள் இருந்தாலோ அல்லது உங்களுக்கும் உங்கள் துணைக்குமிடையில் தவறான புரிதல்கள் இருந்தாலோ அந்த பிரச்சனைகள் இந்த காலகட்டத்தில் சரியாக வாய்ப்புள்ளது. எனவே அவர்கள் மகிழ்ச்சியான திருமண வாழ்க்கையை அனுபவிக்கலாம் மற்றும் அவர்கள் செலவுகளைச் சந்திக்கலாம் மற்றும் பணத்தை மிச்சப்படுத்தலாம். இந்த காலகட்டத்தில் அவர்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

**கடகம்**

பூர நட்சத்திரத்தில் சுக்கிரன் சஞ்சாரம் செய்வது கடக ராசிக்காரர்களுக்கு மிகவும் சாதகமாக இருக்கும். இந்த காலகட்டம் அவர்களுக்கு அதிர்ஷ்மானதாக இருக்கும் மற்றும் பணியில் இருப்பவர்கள் தங்கள் பணியிடத்தில் வெற்றி பெறுவார்கள். இந்த காலகட்டத்தில் பதவி உயர்வுக்கான வாய்ப்புகள் உள்ளன. அதுமட்டுமின்றி, உங்கள் பணிக்காக மேலதிகாரிகள் உங்களைப் பாராட்டலாம். பொருளாதார நிலை வலுவாக இருக்கும். தொழிலதிபர்கள் லாபம் ஈட்ட பல்வேறு வாய்ப்புகளைப் பெறலாம். வெற்றிகரமாக நிறைய பணம் சம்பாதிக்கக்கூடிய கடக ராசிக்காரர்களுக்கு புதிய வருமான ஆதாரங்கள் திறக்கப்படும். நீண்ட நாட்களாக ஏதேனும் ஒரு பிரச்சனையில் சிக்கிக் கொண்டிருந்தால், அதிலிருந்து விடுபடும் காலம் இது. நீங்கள் உறவுகளில் மகிழ்ச்சியைப் பெறுவீர்கள் மற்றும் குடும்பத்துடன் தரமான நேரத்தை செலவிடுவதற்கான வாய்ப்பைப் பெறுவீர்கள். இந்த காலகட்டத்தில் பெரும் நிதி நன்மைகளைப் பெறலாம்.

**துலாம்**

துலாம் ராசிக்காரர்களுக்கு மாதம் மிகவும் பயனுள்ளதாக அமையும். உங்களின் பிரச்சனைகள் குறையும். பணியிடத்தில் பதவி உயர்வு, சம்பள உயர்வு எதிர்பார்க்கலாம். நீங்கள் செய்யக்கூடிய தொழில், வியாபாரம் தொடர்பாக பெரிய வெற்றி கிடைக்க வாய்ப்பு உண்டு. நிதிநிலை வலுவாக இருக்கும். திடீர் பண ஆதாயம், அதிர்ஷ்டம் உண்டாகும். வெளியூர், வெளிநாடு தொடர்பான வேலைகளில் வெற்றி கிடைக்கும். வேலை தேடுபவர்களுக்குத் தகுதிக்கேற்ப நல்ல வேலை அமையும்.

**கும்பம்**

பூர நட்சத்திரத்தில் சுக்கிரன் சஞ்சாரம் செய்வது கும்ப ராசிக்காரர்களுக்கு மிகவும் சாதகமாக இருக்கும். இந்த காலகட்டத்தில் அதிர்ஷ்டத்தின் முழு ஆதரவைப் பெறுவார்கள். உறவில் உள்ள தூரம் இப்போது குறையலாம். நீங்கள் வெளிநாட்டில் வேலை செய்ய வேண்டும் என்று கனவு கண்டிருந்தால், இப்போது அதற்கான வாய்ப்புகள் கிடைக்கலாம். சக ஊழியர்கள் கும்ப ராசிக்காரர்களை ஆதரிப்பார்கள் மற்றும் உங்கள் மேலதிகாரியின் பாராட்டைப் பெறலாம். இந்த காலகட்டத்தில் வியாபாரத்தில் இருப்பவர்கள் நிறைய பணம் சம்பாதிக்கலாம், அது அவர்களுக்கு மகிழ்ச்சியைத் தரும். தனிமையில் இருப்பவர்களுக்கு திருமண முயற்சிகள் வருவதற்கான வாய்ப்புகள் உள்ளன. திருமண வாழ்வில் அன்பும், பாசமும் அதிகரித்து, காதல் உறவுகளுக்கு சாதகமான நேரமாகும். கல்வித் துறையில் மாணவர்கள் வெற்றி பெறலாம்.




**மேஷ இராசிஅன்பர்களே!**

ஆச்சரியப்படும் வகையில் முன்னேற்றம் அடைந்து வரும் உங்களுக்கு, ஆகஸ்ட் மாதம் திட்டமிட்டு செயல்பட வேண்டிய மாதமாகும். பூர்வ புண்ணிய புத்திர ஸ்தானமான ஐந்தாம் இடத்தில் கேது சஞ்சரிப்பதால் குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது, பிள்ளைகள் நலனில் அக்கறை கொள்வது, பூர்வீக சொத்து விவகாரத்தில் அவசரப்படாமல் இருப்பது நன்மையை ஏற்படுத்தும். மாதம் முழுவதும் யோகக் காரகனான ராகு லாப ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் எடுக்கும் முயற்சிகள் வெற்றி பெறும். வரவேண்டிய பணம் வரும். முடங்கி கிடந்த தொழில் முன்னேற்றம் அடையும். சிறு வியாபாரிகளுக்கு எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். சுக ஸ்தானமான நான்காம் இடத்தில் சூரியன் சஞ்சரிப்பதால் உடல் நிலையில் சிறு சங்கடங்கள் தோன்றி மறையும். எதிரிகளால் சங்கடங்கள் உண்டாகும் என்றாலும், அதை சமாளித்திடக்கூடிய நிலை உங்களுக்கு உருவாகும். குடும்பத்தில் நிம்மதியான சூழல் ஏற்படும். கணவன், மனைவிக்குள் இணக்கம் உண்டாகும். புதிய இடம், வீடு வாங்கும் முயற்சி வெற்றியாகும். விவசாயிகளுக்கு மாதத்தின் பிற்பகுதியில் ஆதாயம் அதிகரிக்கும். குடும்பத்தில் பொன், பொருள் சேரும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த இடமாற்றம் கிடைக்கும். செல்வாக்கும் அந்தஸ்தும் உயரும்.

**வணங்க வேண்டிய தெய்வம்:** அம்பாள்.

**ஸ்லோகம்:** கணபதி அஷ்ட்டோத்திரம்

**பரிகாரம்:** விநாயகரை வழிபட்டால் சங்கடங்கள் விலகும்.

**சந்திராஷ்டமம்:** ஆடி மாதம் 17-ம் தேதி 02/08/25 சனிக்கிழமை இரவு 12.47 மணி முதல் ஆடி 20-ம் தேதி 05/08/25 செவ்வாய்க்கிழமை பகல் 11.56 மணி வரை




**ரிஷப இராசி அன்பர்களே!**

நினைத்ததை சாதிப்பதில் முதலிடம் வகிக்கும் உங்களுக்கு ஆகஸ்ட் மாதம் யோகமான மாதமாகும். முயற்சி ஸ்தானத்தில் சூரியன் சஞ்சரிப்பதால் நீங்கள் எடுக்கும் முயற்சிகள் எல்லாம் நடந்தேறும். எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். சுய தொழில் புரிவோருக்கு பணியாளர்களின் ஆதரவு கிடைக்கும். சகோதரர்களின் ஒத்துழைப்பால் இழுபறி வேலைகள் நடந்தேறும்.

குடும்பத்தில் நிம்மதியான நிலை உருவாகும். உங்கள் செல்வாக்கும், அந்தஸ்தும் உயரும். அரசியல்வாதிகளுக்கு தலைமையின் ஆதரவும், தொண்டர்களின் பலமும் உண்டாகும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த இடமாற்றம், பதவி உயர்வு கிடைக்கும். புதிய தொழில் தொடங்க நினைப்பவர்களுக்கு அதற்குரிய அனுமதி கிடைக்கும். அரசுவழி முயற்சிகளில் ஆதாயம் ஏற்படும். சிலருக்கு புதிய சொத்து சேரும்.

உடல் பாதிப்பு விலகும். புதிய இடம், வீடு, வாகனம் வாங்கும் முயற்சி வெற்றியாகும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை கூடும். விவசாயிகளுக்கு எதிர்பார்த்த ஆதாயம் உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே ஏற்பட்ட பிரச்னைகள் முடிவிற்கு வரும். சேமிப்பு உயரும். தாயாரின் உடல்நிலையில் சிறு சங்கடங்கள் தோன்றும்.

**வணங்க வேண்டிய தெய்வம்:** சனீஸ்வரர்

**ஸ்லோகம்:** பைரவர் அஷ்ட்டோத்திரம்

**பரிகாரம்:** குலதெய்வத்தை வழிபட நன்மை உண்டாகும்.

**சந்திராஷ்டமம்:** ஆடி 20-ம் தேதி 05/08/25 செவ்வாய்க்கிழமை பகல் 11.57 மணி முதல் ஆடி 22-ம் தேதி 07/08/25 வியாழக்கிழமை இரவு 9.12 மணி வரை




**மிதுன ராசி அன்பர்களே!**

புத்தி சாதுரியத்தால் எதையும் சாதித்து வரும் உங்களுக்கு ஆகஸ்ட் மாதம் நன்மையான மாதமாகும். ஆகஸ்ட் 30 வரை தைரிய வீரிய பராக்கிரம காரகனான செவ்வாய் சகாய ஸ்தானத்தில் ஞான மோட்சக் காரகனுடன் சஞ்சரிப்பதால் தைரியமும் தன்னம்பிக்கையும் கூடும். எடுக்கும் முயற்சிகள் எல்லாம் வெற்றியாகும். வியாபாரம், தொழில் முன்னேற்றம் அடையும். தடைபட்டு வந்த வேலைகள் நடந்தேறும். எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். நினைத்ததை சாதிக்க முடியும். ஜென்ம குரு அலைச்சலை அதிகரித்தாலும் உங்கள் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்வார். குடும்பத்தில் நிம்மதியான நிலை உண்டாகும். சிலருக்கு குழந்தை பாக்கியம் ஏற்படும். பூர்வீக சொத்தில் ஏற்பட்ட பிரச்னைகள் முடிவிற்கு வரும். திருமண வயதினருக்கு தகுதியான வரன் வரும். புதிய இடம், வீடு வாங்கும் முயற்சி வெற்றியாகும். பெரிய மனிதர்களுடைய ஆதரவு கிடைக்கும். பாக்கிய ஸ்தான ராகு உங்கள் அந்தஸ்தை உயர்த்துவார். நெருக்கடிகளில் இருந்து உங்களை விடுவிப்பார். பல வழியிலும் பணம் வர ஆரம்பிக்கும். குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்னைகள் விலகும் என்றாலும் இரண்டாம் இடத்தில் சூரியன் சஞ்சரிப்பதால் வார்த்தைகளில் நிதானம் தேவை. குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வதால் நன்மை உண்டாகும்.

**வணங்க வேண்டிய தெய்வம்:** அம்பாள்

**ஸ்லோகம்:** லக்ஷ்மி அஷ்ட்டோத்திரம்

**பரிகாரம்:** மீனாட்சி அம்மனை வழிபடுவது

**சந்திராஷ்டமம்:** ஆடி 22-ம் தேதி 07/08/25 வியாழக்கிழமை இரவு 9.13 மணி முதல் ஆடி 25-ம் தேதி 10/08/25 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4.02 மணி வரை




**கடக இராசி அன்பர்களே!**

மனசாட்சியின்படி செயல்பட்டு வரும் உங்களுக்கு பிறக்கும் ஆகஸ்ட் மாதம் கவனமாக செயல்பட வேண்டிய மாதமாகும். விரய ஸ்தானமான 12 ம் இடத்தில் குரு சஞ்சரித்தாலும் அவருடைய பார்வைகள் உங்கள் ராசிக்கு 4, 6, 8 ம் இடங்களுக்கு உண்டாவதால் அஷ்டம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் ராகுவால் வரும் பாதிப்பு உங்களை நெருங்காது. உடல் நிலையில் உண்டான நெருக்கடி விலகும். எதிரிகளால் தோன்றிய அவமானம் விலகும். செல்வாக்கு உயரும். செய்துவரும் வியாபாரம், தொழில் முன்னேற்றம் அடையும். போட்டியாளர்கள் உங்களிடம் வந்து சரணடையும் நிலை உண்டாகும். இழுபறியாக இருந்த வழக்கு உங்களுக்கு சாதகமாகும் என்றாலும், ஜென்ம ராசிக்குள் சஞ்சரிக்கும் சூரியனால் படபடப்பு, அவசரம், வேகம் என்ற நிலையெல்லாம் இருக்கும். அதன் காரணமாக செயல்களில் தடுமாற்றம் ஏற்படும். மனதிலும் குழப்பம் உண்டாகும் என்பதால் இக்காலத்தில் நிதானமாக செயல்பட வேண்டியது அவசியம். குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நன்மை தரும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை கூடும். விவசாயிகளுக்கு மாதத்தின் பிற்பகுதி யோகமாக இருக்கும்.

**வணங்க வேண்டிய தெய்வம்:** அஷ்ட லஷ்மி

**ஸ்லோகம்:** துர்கா அஷ்ட்டோத்திரம்

**பரிகாரம்:** தில்லை காளியை வழிபட சங்கடம் நீங்கும்.

**சந்திராஷ்டமம்:** ஆடி 25-ம் தேதி 10/08/25 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4.03 மணி முதல் ஆடி 27-ம் தேதி 12/08/25 செவ்வாய்க்கிழமை காலை 8.35 மணி வரை




**சிம்மம் ராசி அன்பர்களே!**

மனதில் எண்ணியதை உடனே நடத்த வேண்டும் என்ற வேகம் கொண்ட உங்களுக்கு, ஆகஸ்ட் மாதம் நிதானமாக செயல்பட வேண்டிய மாதமாகும். இந்த மாதத்தில் சிம்ம ராசியினரும் போராட்டத்திற்கு மேல் போராட்டத்தை சந்திக்க வேண்டியதாக இருக்கும். ஜென்ம ராசிக்குள் மோட்சக் காரகன் கேதுவும் செவ்வாயும் சஞ்சரிப்பதால் செயல்களில் குழப்பம் ஏற்படும். லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குரு உங்கள் நிலையில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவார். தவித்த வாய்க்கு தண்ணீர் கிடைத்தது போல் உங்களுக்கு தேவையான காலத்தில் உதவிகள் தேடி வரும். வரவேண்டிய பணம் வரும். குருவின் பார்வை 3, 5, 7 ம் இடங்களுக்கு உண்டாவதால் எத்தகைய பிரச்னை வந்தாலும் அதை எதிர்கொள்ளும் சக்தி உண்டாகும். சகோதரர்கள் வழியில் ஆதரவு கிடைப்பதுடன் உங்கள் முயற்சிக்கும் அவர்கள் உதவியாக இருப்பர். தொழில் நிறுவனம் நடத்தி வருபவர்களுக்கு பணியாளர்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் அதிகரிக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை தேவை.

**வணங்க வேண்டிய தெய்வம்:** பெருமாள்

**ஸ்லோகம்:** சிவ அஷ்டோத்திரம் சொல்லுதல்

**பரிகாரம்:** கற்பக விநாயகரை வழிபட சங்கடங்கள் நீங்கும்.

**சந்திராஷ்டமம்:** ஆடி 27-ம் தேதி 12/08/25 செவ்வாய்க்கிழமை காலை 8.36 மணி முதல் ஆடி 29ம் தேதி 14/08/25 வியாழக்கிழமை பகல் 11.37 மணி வரை

---




**கன்னி ராசி அன்பர்களே!**

சாதுரியம் கொண்ட உங்களுக்கு ஆகஸ்ட்மாதம் நன்மையான மாதமாகும். லாப ஸ்தானமான பதினொன்றாம் இடத்தில் சஞ்சரிக்கும் சூரியன் உங்கள் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்வார். சுபிட்சங்களை அதிகரிப்பார். செல்வாக்கை உயர்த்துவார். அரசு வழியில் மேற்கொள்ளும் முயற்சிகளை சாதகமாக்குவார். அரசியல்வாதிகளின் நிலையை உயர்த்துவார். தலைமையின் ஆதரவும் சிலருக்கு புதிய பொறுப்பும் பதவியும் கிடைக்க வைப்பார்.

பலவழிகளிலும் பணம் வர ஆரம்பிக்கும். குடும்பத்தில் இருந்த நெருக்கடிகள் விலகும். மனதில் உற்சாகம் உண்டாகும். வியாபாரம், தொழில் முன்னேற்றம் அடையும். முதலீட்டிற்கு ஏற்ற லாபம் இல்லையே என்ற நிலை மாறும். சிலருக்கு புதிய சொத்து சேரும். வியாபாரிகளுக்கு புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். தாய்வழி உறவுகளின் ஆதரவு கிடைக்கும். நீண்ட காலமாக தள்ளிப் போன குலதெய்வ வழிபாட்டை மேற்கொள்வீர்கள். உறவினர்கள் நிலை அறிந்து அவர்களுக்கு உதவியும் செய்வீர்கள். வெளிவட்டாரத்தில் செல்வாக்கு உயரும். அதிர்ஷ்டக்காரகன் சுக்கிரன் சாதகமாக சஞ்சரிப்பதால் நினைத்த வேலைகள் நடந்தேறும். பெரியோரின் ஆதரவு கிடைக்கும் பொன், பொருள் சேர்க்கை இருக்கும். விவசாயிகள் இம்மாதம் கவனமாக செயல்படுவது நல்லது. பணியாளர்களின் எதிர்பார்ப்பு நிறைவேறும். தேவைக்கேற்ற வருமானம் வரும்.

**வணங்க வேண்டிய தெய்வம் :** குல தெய்வம்

**ஸ்லோகம்:** நவக்கிரஹ அஷ்டோத்திரம்

**பரிகாரம்:** சங்கர நாராயணரை வழிபடுவது

**சந்திராஷ்டமம்:** ஆடி மாதம் 29-ம் தேதி 14/08/25 வியாழக்கிழமை பகல் 11.38 மணி முதல் ஆடி மாதம் 31-ம் தேதி 16/08/25 சனிக்கிழமை பகல் 2.00 மணி வரை

---




**துலா இராசி அன்பர்களே!**

முன்னேற்றப் பாதையில் நடை போடும் உங்களுக்கு ஆகஸ்ட் மாதம் நன்மையான மாதம். யோகக்காரகன் ராகு பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் சஞ்சரித்தாலும், அவருக்கு குருவின் பார்வை கிடைப்பதால் உங்கள் கனவுகள் நனவாகும். இதுவரை இருந்த நெருக்கடிகள், ஏற்பட்ட அவமானங்கள் விலகும். வெளிநாட்டு முயற்சிகள் சாதகமாகும். பிள்ளைகளால் ஏற்பட்ட பிரச்னைகள் முடிவிற்கு வரும். சிலருக்கு நீண்ட காலமாக எதிர்பார்த்த குழந்தை பாக்கியம் உண்டாகும். பூர்வீக சொத்தில் ஏற்பட்ட வழக்குகள் சாதகமாகும். நீங்கள் எடுக்கும் முயற்சிகளுக்கு பெரியோரின் ஆதரவு கிடைக்கும். பாக்கிய ஸ்தான குரு வரவை அதிகரிப்பார். நீண்டநாள் கனவுகளை நனவாக்குவார். வேலை, திருமணம், குழந்தை பாக்கியம், வீடு, வாகனம், செல்வாக்கு, பட்டம், பதவி என கனவுகள் நனவாகும். சமூகத்தில் அந்தஸ்தும், மரியாதையும் கூடும். உடல் பாதிப்பு விலகும். அரசியல்வாதிகளுக்கு புதிய பொறுப்பு கிடைக்கும்.

ஆக. 8 முதல் புதன் சாதகமாக சஞ்சரிப்பதால் வியாபாரிகளுக்கு எதிர்பார்த்த ஒப்பந்தம் கிடைக்கும். வியாபாரம் தொழிலுக்காக கேட்டிருந்த பணம் வரும்.

அரசு வழியில் எதிர்பார்த்த அனுமதி கிடைக்கும். மாதம் முழுவதும் அதிர்ஷ்டக்காரகன் சுக்கிரன் சாதகமாக சஞ்சரிப்பதால் இதுவரை இருந்த சங்கடங்கள், குழப்பங்கள் விலகும். பொருளாதார நிலை உயரும். நீண்ட காலமாக நிறைவேற்ற முடியாமல் இருந்த குலதெய்வ வழிபாட்டை நிறைவேற்றுவீர்கள். உறவுகள் மத்தியில் செல்வாக்கு உயரும். செலவிற்கேற்ற வரவு வரும்.

**வணங்க வேண்டிய தெய்வம் :** ராகு கேது

**ஸ்லோகம்:** கால பைரவர் அஷ்டோத்திரம்

**பரிகாரம்:** குலதெய்வ வழிபாடு நன்மை தரும்.

**சந்திராஷ்டமம்:** ஆடி மாதம் 31ம் தேதி 16/08/25 சனிக்கிழமை பகல் 2.01 மணி முதல் ஆவணி மாதம் 2ம் தேதி 18/08/25 திங்கள்கிழமை மாலை 4.36 மணி வரை

---




**விருச்சிக இராசி அன்பர்களே!**

நினைத்ததை சாதிக்கும் வலிமை கொண்ட உங்களுக்கு ஆகஸ்ட்மாதம் யோகமான மாதமாகும். அர்த்தாஷ்டம சனியாக சஞ்சரித்து வந்த உங்கள் நட்சத்திராதிபதி வக்கிரம் அடைந்திருப்பதால் நெருக்கடிகள் விலகும். மனதில் நிம்மதி உண்டாகும். கடந்த மாதம் வரை இருந்த போராட்ட நிலை மாறும். பெரிய மனிதர்கள் ஆதரவு கிடைக்கும். கோயில்களுக்கு சென்று வேண்டுதல்களை நிறைவேற்றுவீர்கள். சிலர் குலதெய்வ வழிபாட்டை மேற்கொள்வர். உறவினர் மத்தியில் செல்வாக்கு உயரும். ஜூலை 30 முதல் ராசி நாதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் எதிர்பார்த்த பணம் வரும். பொருளாதார நிலையும் செல்வாக்கும் உயரும். குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் பிரச்னைகள் முடிவிற்கு வரும். சுக்கிரன் அஷ்டம ஸ்தானத்திற்கு செல்வதால் நன்மை அதிகரிக்கும். எதிர்பாலினரால் ஏற்பட்ட தொல்லை விலகும். குடும்பத்தில் நிம்மதி உண்டாகும். மாதத்தின் பிற்பகுதியில் சிலருக்கு சொத்து சேரும். பொன் பொருள் சேர்க்கை அதிகரிக்கும். தனியார் நிறுவனத்தில் வேலை செய்பவர்களுக்கு ஏற்பட்ட நெருக்கடிகள் விலகும். வேலை பார்க்கும் இடத்தில் மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். விவசாயிகள் சிந்தித்து செயல்படுவது அவசியம்.

**வணங்க வேண்டிய தெய்வம் :** துர்க்கை

**ஸ்லோகம்:** துர்க்கா அஷ்டோத்திரம்

**பரிகாரம்:** தர்பாரண்யேஸ்வரரை வழிபாடு

**சந்திராஷ்டமம்:** ஆவணி மாதம் 2ம் தேதி 18/08/25 திங்கள்கிழமை மாலை 4.37 மணி முதல் ஆவணி மாதம் 4ம் தேதி 20/08/25 புதன்கிழமை இரவு 8.18 மணி வரை




**தனுசு இராசி அன்பர்களே!**

இந்த மாதம் ராசிநாதன் குரு சப்தம ஸ்தானத்தில் மிக அனுகூலமாக இருக்கிறார். பணப் புழக்கம் அதிகரிக்கும். தேவைகள் பூர்த்தியாகும். மதிப்பும் மரியாதையும் சிறப்பாக இருக்கும். உங்கள் மீதான அவப்பெயர் மறைந்து செல்வாக்கு மேம்படும். உங்கள் சொல்லுக்குப் பிறர் மரியாதை கொடுப்பர். வீட்டில் மகிழ்ச்சி அதிகரிக்கும். குடும்ப பிரச்சனை கட்டுக்குள் இருக்கும். ஆனாலும் தேவையான இடங்களில் நீங்கள் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. தேவைகள் ஒவ்வொன்றாகப் பூர்த்தியாகும். நீண்ட நாட்களாக வாங்க நினைத்த பொருளை வாங்கலாம். நண்பர்கள் இடையே அன்னியோன்னியம் அதிகரிக்கும். உத்தியோகம் பார்ப்பவர்கள் நல்ல வளர்ச்சியைக் காணலாம். உங்கள் முன்னேற்றத்திற்கு தடையாக இருந்தவர்கள் தவறை உணர்ந்து உங்களிடம் வந்து சரணடைவார்கள். நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த பதவி உயர்வு கிடைக்கும். தொழில் புரிவோருக்கு இருந்து வந்த மந்த நிலை மறையும். அலைச்சலும் வேலைப் பளுவும் ஓரளவு இருக்கத்தான் செய்யும். அதே வேளையில் நீங்கள் சென்ற இடமெல்லாம் அனுகூலம் ஏற்படும். கலைத்துறையினருக்கு புதிய வாய்ப்புகள் வந்து சேரும். ஏற்கனவே இருந்து வந்த பிரச்சனைகளில் இருந்து விடுபடுவீர்கள். அரசியல்வாதிகள் நினைத்ததை நிறைவேற்றிக் கொள்ள வாய்ப்புகள் உண்டு. உங்கள் சொல்லுக்கு பிறர் கட்டுப்படும் நிலையும் உருவாகும். மாணவர்கள் சிறப்பான முன்னேற்றத்தை அடையலாம்.

**வணங்க வேண்டிய தெய்வம்:** விநாயகர்

**ஸ்லோகம்:** வீட்டில் தினமும் விளக்கேற்றுவது

**பரிகாரம்:** தியானம், யோகா, மற்றும் விநாயகர் வழிபாடு

**சந்திராஷ்டமம்:** ஆவணி 4-ம் தேதி 20/08/25 புதன்கிழமை இரவு 8.19 மணி முதல் ஆவணி மாதம் 6-ம் தேதி 22/08/25 வெள்ளிக்கிழமை இரவு 1.53 மணி வரை




**மகர இராசி அன்பர்களே!**

எந்த நிலை வந்தாலும் அதை எதிர்கொண்டு வெற்றி பெறும் உங்களுக்கு, திட்டமிட்டு செயல்பட வேண்டியமாதமாக ஆகஸ்ட் மாதம், ஆசப்தம ஸ்தானத்தில் சூரியன் சஞ்சரிப்பதால் பணியில் இருப்பவர்களுக்கு எதிர்பார்த்த இடமாற்றம், பதவி உயர்வு கிடைக்கும். வியாபாரிகள் தங்கள் வியாபாரத்தை வெளியூரிலும் தொடங்க முயற்சி மேற்கொள்வர். சிலர் வசிக்கும் இடத்தை, ஊரை விட்டு வேறு இடத்திற்கு மாறுவதற்கு முயற்சிப்பீர்கள். இவையெல்லாம் தொழில் காரணமாகவும், பணியின் காரணமாகவும் ஏற்படும் நிலையாகும். மாதம் முழுவதும் சத்ரு ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குரு எதிர்ப்புகளையும் சங்கடங்களையும் ஏற்படுத்தினாலும், அவரது பார்வைகள் உங்கள் நிலையை உயர்த்தும். தொழிலை முன்னேற்றம் அடைய வைக்கும். வேலை தேடி வந்தவர்களுக்கு தகுதியான வேலை கிடைக்கும். விரய செலவுகள் கட்டுப்படும். குடும்பத்தில் நிம்மதியும் சந்தோஷமும் உண்டாகும். அஷ்டம ஸ்தானத்தில் கேதுவும், ஜூலை 30 வரை செவ்வாயும் சஞ்சரிப்பதால் உடல் நிலையில் எதிர்பாராத சங்கடங்கள் அல்லது எதிரிகளால் இடையூறுகள், அவமானம் என்று சிலருக்கு ஏற்பட வாய்ப்பிருப்பதால் சுய ஒழுக்கத்திலும் உடல் நிலையிலும் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தினர் ஆலோசனையை ஏற்பதும் அவர்களை அனுசரித்துச் செல்வதும் அவசியம். சிலருக்கு புதிய சொத்து சேரும். எதிர்பார்த்த ஒப்பந்தம் கிடைக்கும். தேவையான பணம் வரும்.

**வணங்க வேண்டிய தெய்வம்:** அனுமன்

**ஸ்லோகம்:** அனுமன் ஸ்லோகம்

**பரிகாரம்:** சனீஸ்வரருக்கு நல்லெண்ணெய் தீபமேற்றுவது

**சந்திராஷ்டமம்:** ஆவணி 6-ம் தேதி 22/08/25 வெள்ளிக்கிழமை இரவு 1.54 மணி முதல் ஆவணி 9-ம் தேதி 25/08/25 திங்கள்கிழமை காலை 9.58 மணி வரை




**கும்ப இராசி அன்பர்களே!**

எந்த ஒன்றிலும் தனித்துவத்துடன் வாழ்ந்து வரும் உங்களுக்கு ஆகஸ்ட்மாதம் அதிர்ஷ்டமான மாதமாகும். ஜென்ம ராசிக்குள் யோகக் காரகன் ராகு சஞ்சரித்தாலும் 5ம் இட குருவின் பார்வை ராசிக்கு உண்டாவதால் உங்கள் நிலையில் இருந்த பாதிப்பு, போராட்டம், பிரச்னைகள் யாவும் விலகும். மனஅழுத்தம் நீங்கும். நீண்ட நாள் கனவு நனவாகும். எடுத்த வேலைகள் வெற்றியாகும். உங்கள் செல்வாக்கு உயரும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

அரசியல்வாதிகளுக்கு எதிர்பார்த்த பொறுப்பு, பதவி கிடைக்கும். தொழிலில் ஏற்பட்ட தடைகள் விலகும். சிலருக்கு எதிர்பார்த்த ஒப்பந்தங்கள் கிடைக்கும். ஜூலை 26 முதல் அதிர்ஷ்டக்காரகன் சுக்கிரன் சாதகமாக சஞ்சரிப்பதால் பொன், பொருள் சேர்க்கை அதிகரிக்கும். கணவன் மனைவிக்குள் இணக்கம் உண்டாகும். ஆக. 3 முதல் புதன் சஞ்சாரம் சாதகமாக இருப்பதால் புதிய இடம், வீடு வாங்கும் முயற்சி வெற்றியாகும். எதிர்பார்த்த பணம் வரும். வியாபாரம், தொழில் முன்னேற்றம் அடையும். பணியில் இருந்த நெருக்கடி விலகும் என்றாலும், சப்தம ஸ்தானத்தில் கேதுவும் செவ்வாயும் இணைந்து சஞ்சரிப்பதால் புதிய நண்பர்களிடம் எச்சரிக்கை அவசியம். வாழ்க்கைத் துணையை அனுசரித்துச் செல்வது நன்மையை ஏற்படுத்தும்.

**வணங்க வேண்டிய தெய்வம்:** வேப்பிலை அம்பாள்

**ஸ்லோகம்:** லலிதா ஸகஸ்ர நாமம்

**பரிகாரம்:** அங்காள பரமேஸ்வரியை வழிபடுவது

**சந்திராஷ்டமம்:** ஆவணி மாதம் 9ம் தேதி 25/08/25 திங்கள்கிழமை காலை 9.59 மணி முதல் ஆவணி மாதம் 11-ம் தேதி 27/08/25 புதன்கிழமை இரவு 8.19 மணி வரை




**மீன இராசி அன்பர்களே !**

நடத்தி முடிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்ட உங்களுக்கு, ஆகஸ்ட்மாதம் யோகமான மாதம். ராசிநாதன் 4 ம் இடத்தில், நட்சத்திராதிபதி விருது ஸ்தானத்தில் என்ற நிலை இருந்தாலும், பணிபுரியும் இடத்தில் ஏற்பட்ட நெருக்கடி, குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பம் விலகும். பிறரால் ஏற்பட்ட சங்கடம் நீங்கும். உங்கள் தன, குடும்பாதிபதி செவ்வாயும் 6 ம் இடத்தில் சஞ்சரிப்பதால் அசாத்தியமான துணிச்சல் ஏற்படும். நீண்ட காலமாக தடைபட்ட வேலைகளை ஒவ்வொன்றாக முடிவிற்கு கொண்டு வருவீர்கள். குருபார்வைகள் சாதகமாக இருப்பதால் உங்கள் செல்வாக்கு அதிகரிக்கும். என்னதான் சம்பாதித்தாலும், கையில் பணம் தங்கவில்லையே என்ற நிலை மாறும். விரய செலவு குறையும். சேமிப்பு அதிகரிக்கும். சிலர் புதிய வீடு, வாகனம் என்று வாங்குவர். உங்களைத் தூற்றுவதற்கு நேரம் காலம் பார்த்திருந்தவர்கள் உங்களுக்கு எதிராக தவறான பிரச்சாரம் செய்வார்கள் என்பதால் ஒவ்வொரு செயலிலும் கவனமாக இருப்பது நன்மையாகும். தனியார் நிறுவனத்தில் பணிபுரிவோரின் எதிர்பார்ப்பு பூர்த்தியாகும்.

**வணங்க வேண்டிய தெய்வம்:** காளி அம்பாள்

**ஸ்லோகம்:** கட்கமாலா ஸ்லோகம் சொல்லுதல்

**பரிகாரம்:** குலதெய்வ வழிபாடு நன்மையை உண்டாக்கும்.

**சந்திராஷ்டமம்:** ஆவணி 11-ம் தேதி 27/08/25 புதன்கிழமை இரவு 8.20 மணி முதல் ஆவணி 14-ம் தேதி 30/08/25 சனிக்கிழமை காலை 7.55 மணி வரை

# சமயபுரத்தை சுற்றியுள்ள 28 விடுதிகளில் சோதனை

## போலீஸார் திடீர் நடவடிக்கை




J.மணிகண்டன், S.வெங்கடேஷ்

திருச்சி மாவட்டம் சமயபுரம் பகுதியில் சக்தி தலங்களில் பிரசித்தி பெற்ற அருள்மிகு மாரியம்மன் கோயில் உள்ளது. இக்கோவிலை சுற்றி ஏராளமான தங்கும் விடுதிகள் இருக்கின்றன, அங்கு சட்டவிரோதமாக பாலியல் தொழில் நடப்பதாக, அவ்வப்போது தகவல்கள் வெளியானது.

இந்நிலையில் தகவலின்பேரில், சமயபுரம் பகுதியை சுற்றி 28-க்கும் மேற்பட்ட தனியார் தங்கும் விடுதிகளிலும், டிஎஸ்பி உத்தரவின் பெயரில் சமயபுரம் காவல் நிலைய ஆய்வாளர் ரகுராமன், லால்குடி அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் ஜெயா, உதவி ஆய்வாளர் மேனகா, சிறுகனூர் காவல் நிலைய ஆய்வாளர் குணசேகரன் ஆகியோர் அதிரடி சோதனையில் ஈடுபட்டனர். போலீஸார் மூன்று அணியாகப் பிரிந்து நடத்திய சோதனையில் சந்தேகத்துக்கு இடமாக விடுதிகளில் தங்கியிருந்த 5-க்கும் மேற்பட்ட பெண்களை விசாரணைக்காக சமயபுரம் காவல் நிலையத்துக்கு அழைத்து வந்து விசாரித்து நடவடிக்கை மேற்கொண்டனர்.

நிருபர்: K.ஜானகி, திருச்சி.



ஜிசிபி (GCP) சென்னை காவல் கரங்கள் உதவி மையத்துடன் இணைந்து செயல்படும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களை சேர்ந்த தன்னார்வலர்களுக்கு ஆணையரக கலந்தாய்வு கூடத்தில் கலந்தாய்வுக் கூட்டம் கூடுதல் காவல் ஆணையாளர் திரு.விஜயேந்திர பிதாரி IPS அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தங்கள் உரிய வழிமுறை செயல்பாடுகள் குறித்தும், தேவைப்படும் உதவிகள் குறித்தும் தன்னார்வலர்கள் தங்கள் கருத்துகளை காவல் அதிகாரிகளுடன் பகிர்ந்தனர். இந்த கூட்டத்தில் தன்னார்வலர்களுக்கு தேவையான, உதவிகளற்ற நபர்களை மீட்க தேவைப்படும், மீட்பு உபகரணங்கள் மற்றும் அத்தியாவசிய தேவைகளான உடைகளுடன் இதர பொருட்கள் பயன்பாட்டுக்காக வழங்கப்பட்டது.

நிருபர்: G.சதீஷ்குமார், சென்னை.

மாவட்ட SP அரவிந்த் தலைமையில் நடைபெற்ற

# தென்காசி கவல்துறை குற்றதடுப்பு கலந்தாய்வு கூட்டம்



தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.S.அரவிந்த் அவர்களின் தலைமையில் மாவட்ட காவல் அதிகாரிகளுக்கான மாதாந்திர குற்ற கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்டத்தில் நிலுவையில் உள்ள வழக்குகள் மற்றும் விரைந்து முடிக்கப்பட வேண்டிய வழக்குகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டு வழக்குகளை விரைந்து முடிக்க அறிவுரைகளை வழங்கினார். குற்றவாளிகளை கண்டறிவது மட்டுமில்லை குற்றங்கள்நடக்காமல் தடுப்பதும் காவல்துறையின் பணியாகும். மேலும் கடந்த மாதம் மாவட்டத்தில் சிறப்பாக பணியாற்றிய காவலர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் அரசு வழக்கறிஞர்கள், கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், துணைக் காவல் கண்காணிப்பாளர்கள், காவல் ஆய்வாளர்கள் மற்றும் சார்பு ஆய்வாளர்கள் கலந்து கொண்டனர்.

சட்ட ஆலோசகர்: K.அருணாச்சலம், தென்காசி



திருச்சி மாவட்ட SP திரு.S.செல்வநாகத்தினம் தலைமையில்

# மக்கள் குறைதீர் முகாமில் மனுக்களுக்கு தீர்வு

திருச்சி மாவட்ட காவல் துறை அலுவலகத்தில் வாராந்திர பொதுமக்கள் குறைதீர்ப்பு கூட்டம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.S.செல்வநாகரத்தினம் IPS அவர்களின் தலைமையில் மாவட்ட காவல் அலுவலகத்தில் நடைபெற்றது.

பொதுமக்கள் குறைதீர்ப்பு கூட்டத்திற்கு மனு அளிக்க வந்திருந்த பொதுமக்களிடமிருந்து மனுக்களை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் நேரடியாக பெற்று குறைகளை கேட்டறிந்தார். மேலும், பெறப்பட்ட மனுக்கள் மீது துரிதமாக விசாரணை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். திருச்சிமாவட்ட காவல்துறை சார்பாக பொதுமக்களின் மனுக்களின் குறைகளுக்கு தீர்காண்பதுடன் மக்கள் குற்றசம்பவங்களால் பாதிக்கப்படாமல் பாதுகாப்பு பணிகளை மேற்கொள்ள காழல்துறையினருக்கு தக்க அறிவுரைகள் கூறி வழிநடத்தி வருகிறார் திருச்சி மாவட்ட SP திரு.S.செல்வநாகரத்தினம் IPS என்பது குறிப்பிடத்தக்கது.

தலைமை நிருபர்: N.ராக்கேஷ் சுப்ரமணியன், திருச்சி



தென் மாநிலங்களில் 100-க்கும் மேற்பட்ட சொகுசு கார்களை திருடிய இராஜஸ்தான் மாநில குற்றவாளியை கைது செய்த சென்னை மாநகரம் திருமங்கலம் காவல் குழுவினரை சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு.ஆ.அருண், IPS., அவர்கள் நேரில் அழைத்து பாராட்டி வெகுமதி வழங்கினார்.

சிறப்பு நிருபர்: LNK.சந்தன், சென்னை.

# ஆடிப்பெருக்கு



பொன்னியின் செல்வன் படித்தவர்களுக்கு ஆடி பெருக்கு எப்படி இருந்திருக்கும் என்பது கண் முன்னே தெரியும்.கல்கியின் விவரிப்புகள் நம்மை ஆச்சர்யப்பட வைக்கும். ராஜராஜ சோழனின் நண்பர் வந்தியத்தேவனின் வருகையோடு வீராணம் ஏரிக்கரையில் ஆடிப்பெருக்குக் கொண்டாட்ட காட்சிகள் விரிகின்றன. ஆடிப் பதினெட்டாம் பெருக்கன்று சோழநாட்டு நதிகளிலெல்லாம், வெள்ளம் இருகரையையும் தொட்டுக்கொண்டு ஓடுவது வழக்கம். அந்த நதிகளிலிருந்து தண்ணீர் பெறும் ஏரிகளும் பூரணமாக நிரம்பிக் கரையின் உச்சியைத் தொட்டுக்கொண்டு அலைமோதிக் கொண்டிருப்பது வழக்கம். அன்று பதினெட்டாம் பெருக்குத் திருநாள் அல்லவா? பக்கத்துக் கிராமங்களிலிருந்து, தந்த நிறத் தென்னங்குருத்துகளால் சப்பரங்கள் கட்டி இழுத்துக்கொண்டு கும்பல் கும்பலாக மக்கள் அங்கே வந்துகொண்டிருந்தார்கள்.

ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் சில வயோதிகர்களும்கூடப் புதிய ஆடைகள் அணிந்து விதவிதமான அலங்காரங்கள் செய்துகொண்டு வந்திருந்தார்கள். பெண்களின் கூந்தல்களைத் தாழம்பூ, செவந்திப்பூ, மல்லிகை, முல்லை, இருவாட்சி, செண்பகம் முதலிய மலர்கள் கொத்துக் கொத்தாய் அலங்கரித்தன.



கூட்டாஞ்சோறும், சித்திரான்னமும் எடுத்துக்கொண்டு பலர் குடும்பம் குடும்பமாக வந்திருந்தார்கள். ஆடவர்களில் சில வம்புக்காரர்கள், தங்கள் காதலிகளின் கூந்தல்களில் சூடியிருந்த மலர்களை அவர்கள் அறியாமல் எடுத்துக் கண்வாய் ஓரத்தில் விட்டு ஏரிக்கரைக்கு மறு பக்கத்தில் அவை ஓடி வருவதைக் கண்டு மகிழ்ந்தார்கள். இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டு சிறிது நேரம் வல்லவரையன் வந்தியத்தேவன் அங்கேயே நின்றுகொண்டிருந்தான். அங்கு நின்ற பெண்களில் இனிய குரலையுடைய சிலர் பாடுவதையும் காது கொடுத்துக் கேட்டான். அவர்கள் ஓடப்பாட்டும், வெள்ளப் பாட்டும், கும்மியும், சிந்தும் பாடினார்கள்'' என ஆடிப்பெருக்குக் கொண்டாட்டத்தை விவரிக்கிறார் கல்கி.

**ஆடிப்பெருக்கு:**

தண்ணீரைப் போற்றும் தமிழர்களின் திருவிழா! நீரோடும் நிலத்தோடும் காலத்தோடும் தொடர்புடைய தமிழர்களின் அறிவியல்பூர்வ மரபு விழா.



# ROAD SAFETY CLUB மாணவர் அமைப்பு

## கன்னியாகுமரியில் தொடங்கிய SP Dr. R.ஸ்டாலின் IPS அவர்கள்

சாலையில் சாகசம் என்னும் பெயரில் நீங்கள் செய்யும் தவறால் பொருளாதாரத்தில் பின்னடைவை சந்திக்கும் உயிரிழப்பவரின் குடும்பத்தின் நிலைமையை அனைவரும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

மாணவர்கள் சாலையில் ரிஸ்க் எடுப்பதை விடுத்து தன்னுடைய சுய முன்னேற்றத்தை வளர்த்துக் கொள்ள ரிஸ்க் எடுக்க வேண்டும். Road Safety Club ( RSC ) மாணவர் அமைப்பு திட்டத்தினை தொடங்கி வைத்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் R.ஸ்டாலின் IPS அவர்களின் பேச்சு.

மாணவர்கள் காவலர்களை பார்த்தவுடன் மட்டுமே ஹெல்மெட் அணியும் எண்ணத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். ஹெல்மெட் போலீசாருக்காக போட வேண்டாம் உங்களின் பாதுகாப்பிற்காக போடுங்கள். மேலும் உங்கள் பெற்றோர்களிடமும் ஹெல்மெட் அணிய கட்டாயப்படுத்துங்கள்.

நம்ம ஊர் சாலைகள் 120 கிலோமீட்டர் வேகத்தில் செல்லும் சாலைகள் இல்லை. எனவே, அதில் ரிஸ்க் எடுத்து சாகசம் செய்ய வேண்டாம் என அறிவுறுத்தினார்.

வாலிப வயதில் உள்ளவர்கள் சாலையில் சாகசம் செய்து விபத்தில் சிக்கிக் கொள்கிறார்கள். நீங்கள் ரிஸ்க் எடுத்து செய்யும் சாகசம் எதிரேவரும் அப்பாவியின் குடும்பத்தை, குடும்பத்தின் பொருளாதாரத்தை பெரிதும் பாதிக்கும் என பேசினார்.

இந்நிகழ்வில் மாணவர்கள் IPS அதிகாரியாக வர நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பது குறித்த சந்தேகங்களை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் கேட்டறிந்தனர்.

**ROAD SAFETY CLUB செயல்பாடுகள்**

தொடக்க கட்டமாக ஒவ்வொரு பள்ளிகளிலும் சுமார் 20 மாணவர்கள் இணைக்கப்பட்டுள்ளனர். அனைவருக்கும் சீருடை மற்றும் தொப்பி வழங்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பில் உள்ள மாணவ மாணவியர்களுக்கு போக்குவரத்து போலீஸார் பயிற்சி அளிப்பார்கள்.

போக்குவரத்து போலீஸாருடன் இணைந்து போக்குவரத்து விதிகளை அமல்படுத்தும் பணியில் ஈடுபடுத்த உள்ளனர். இந்த அமைப்பில் உள்ள மாணவர்கள் மற்ற மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதுடன் மாணவர்களின் பெற்றோர்களுக்கும் போக்குவரத்து விதிகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் NO HELMET NO ENTRY மற்றும் ZERO ACCIDENT KUMARI உள்ளிட்ட விழிப்புணர்வு செய்திகளை மக்களிடையே எடுத்துச் செல்ல வேண்டும்.

அதிகமான மாணவ மாணவியர்கள் இந்த அமைப்பில் சேர்ந்து போக்குவரத்து போலீசார் உடன் இணைந்து மக்கள் பணியாற்றுவதை உறுதி செய்ய வேண்டும்.

இந்நிகழ்வின் போது, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தடுப்பு பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு மதியழகன் கன்னியாகுமரி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் திரு. ஜெயச்சந்திரன், காவல் துணை கண்காணிப்பாளர் ( பயிற்சி ) திரு.இளம் செழியன், கன்னியாகுமரி போக்குவரத்து ஒழுங்கு பிரிவு காவல் ஆய்வாளர் திரு. பிரபு மற்றும் காவலர்கள் உடனிருந்தனர்.

தலைமை நிருபர்: J.ஜெயவேல்முருகன்,
கன்னியாகுமரி

# திருநெல்வேலி ஜங்ஷன் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் குபேந்திரனுக்கு பாராட்டு

திருநெல்வேலி மாநகர சந்திப்பு ரயில் நிலைய பகுதியில் சேரன்மாதேவி ஆறுமுகம் என்பவரின் மகள் அருள்மதி (வயது 22) என்பவர் தற்கொலை செய்யப்போவதாக வந்த தகவலின் பேரில் ஜங்ஷன் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் குபேந்திரன் அவர்கள் சென்று அருள் மொழியை காவல் நிலையம் அழைத்து வந்துள்ளார்.

காவல் ஆய்வாளர் அவர்கள் விசாரித்து, அவரது குடும்பத்தினருக்கு தகவல் தெரிவித்து, காவல் நிலையம் வரச் சொல்லி உள்ளார்கள்.

மேற்கண்ட அருள்மதி, அவரது உடன் பிறந்த அக்கா முல்லை அரசி என்பவரின் கணவர் மகாராஜன் (ஏசி மெக்கானிக்) என்பவருடன் தொடர்பில் இருந்ததாகவும் இருவரும் மும்பையில் தங்கி இருந்ததாகவும் தற்போது சேரன்மாதேவியில் நடைபெற்ற கோவில் கொடை விழாவிற்கு வந்ததாகவும் குடும்பத்தில் அனைவரும் அருள்மதியை சத்தம் போட்டுள்ளனர்.

இதனால், மனம் உடைந்த அருள்மதி ஒரு வாரத்திற்கு முன்பு மருந்து குடித்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றதாகவும், தற்போது மீண்டும் திருநெல்வேலி சந்திப்பு பகுதியில் சென்று மருந்து குடித்து தற்கொலை செய்யப் போவதாக அருள்மதி வீட்டில் கூறிவிட்டு வந்ததால், அருள்மதியின் அக்கா முல்லையரசி



காவல் கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் கொடுத்ததின் பேரில் தற்கொலை முயற்சி செய்த அருள்மொழியை மீட்டு காவல்நிலையம் அழைத்து வரப்பட்டு அவரது குடும்பத்தினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு அருள்மொழியை அவர்கள் குடும்பத்தினரிடம் ஒப்படைத்த SSI குபேந்திரன் அவர்களை DC Dr.V.பிரசன்னகுமார் IPS மற்றும் AC N.தர்ஷிகா நடராஜன் இருவரும் பாராட்டினர்.

நிருபர்: R.ஜோதிபாசு, திருநெல்வேலி

---

# கரூர் மாவட்டத்தில் பொதுமக்கள் வீட்டுக்கே சென்று FIR நகல் வழங்கிவரும் காவல்துறை

கரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உத்தரவின் பேரில், காவல் துறையினர் புகார்தாரரின் இல்லம் தேடி சென்று முதல் தகவல் அறிக்கை (FIR) வழங்கி வருகின்றனர்.

கரூர் மாவட்டத்தில் 18 சட்டம் மற்றும் ஒழுங்கு காவல் நிலையங்களும், 3 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் மற்றும் மாவட்ட குற்றப்பிரிவு மற்றும் சைபர் கிரைம் காவல் நிலையங்களும் இயங்கி வருகின்றன. மேற்படி காவல் நிலையங்களில் பதிவு செய்யப்படும் வழக்குகளின் முதல் தகவல் அறிக்கைகளை புகார்தாரர்களுக்கு சம்பந்தப்பட்ட காவல் நிலையங்களி லிருந்து காவல் துறையினரால் நேரடியாக அவர்களுடைய இல்லங்களுக்கே தேடிச்சென்று வழங்கப்பட்டு வருகிறது. இந்த நடைமுறையானது கடந்த



21.07.2025 ஆம் தேதி முதல் செயல்படுத்தப்பட்டு இதுவரை 76 முதல் தகவல் அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன.

காவல் நிலையங்களில் பதியப்படும் வழக்குகளின் முதல் தகவல் அறிக்கையை (FIR) புகார்தாரர்களின் சிரமத்தை தவிர்க்க அவர்களின் இல்லம் தேடி சென்று வழங்குவது, பொதுமக்களுக்கு காவல்துறையின் மீது நம்பிக்கை மற்றும் நெருக்கமான தொடர்பை ஏற்படுத்தியுள்ளதோடு, பொதுமக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பையும் பெற்றுள்ளது.

கரூர் மாவட்ட காவல்துறையின் இத்தகைய மக்கள் நேய நடவடிக்கைகள் ஒரு முன்மாதிரியாக இருப்பதோடு பொதுமக்களின் நம்பிக்கையை வெகுவாக பெற்றுள்ளதாகவும் தெரிவித்தனர்.

நிருபர்: N.முகமதுநபி, கரூர்

கண்டிப்பாக சர்க்கரை நோயாளிகள் பனங்கருப்பட்டி சாப்பிடலாம். சர்க்கரையை தீயில் போட்டால் தீயை அதிகரிக்கும். அதேசமயம் பனங்கருப்பட்டி தீயில் போட்டால் தீயை அணைக்கும். பருவம் அடைந்த பெண்களுக்கு கருப்பட்டியையும், உளுந்தையும் சேர்த்து உளுந்தங்களி செய்து கொடுத்தால், இடுப்பு வலுப்பெருவதுடன், கருப்பையும் ஆரோக்கியமாக இருக்கும். சீரகத்தை வறுத்து சுக்குக்கருப்பட்டியுடன் சேர்த்து சாப்பிட்டால், நன்கு பசி எடுக்கும். ஓமத்தை, கருப்பட்டியுடன் சேர்த்துச் சாப்பிட்டால், வாயுத்தொல்லை நீங்கும்.

குப்பைமேனிக் கீரையுடன் கருப்பட்டியைச் சேர்த்து வதக்கிச் சாப்பிட்டால் வறட்டு இருமல், நாள்பட்ட சளித்தொல்லை நீங்கும். ஆண்மையை வீரியப்படுத்துவதிலும் கருப்பட்டிக்கு தனிப்பங்கு உண்டு. காபிக்கு சீனிக்கு பதிலாக கருப்பட்டிப் போட்டுக் குடித்தால், உடலில் சர்க்கரையின் அளவு கட்டுப்பாடாக இருக்கும். சர்க்கரை நோயாளிகளும்கூட கருப்பட்டி காபி குடிக்கலாம். இதில் சுண்ணாம்புச் சத்தும், நோய் எதிர்ப்பு சக்தியும் அதிகமாக இருக்கிறது.

சர்க்கரை நோயாளிகள் கைக்குத்தல் அரிசி சாதத்துடன் கருப்பட்டியைக் கலந்து சாப்பிட்டு வந்தால், சர்க்கரையின் அளவு கட்டுப்பாட்டில் இருப்பதுடன், அடிக்கடி சிறுநீர் போவதும் குறையும். கருப்பட்டி பணியாரம் குழந்தைகளுக்கு ஏற்றது.

# கருப்பட்டி



## இயற்கை வாழ்வியலும் உடல் நலமும்..

**உங்கள் உடலின் பாகங்களில் அக்கறை கொள்ளுங்கள். அவற்றை பயமுறுத்தாதீர்கள். இந்த உடல் பாகங்கள் அனைத்தும் சந்தையில் எளிதாகக் கிடைப்பதில்லை. கிடைத்தாலும் மிகவும் விலை உயர்ந்தவை. அநேகமாக உங்கள் உடலும் ஏற்றுக் கொள்ளாது. எனவே உங்கள் உடல் பாகங்களை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளுங்கள்**

1. காலையில் உரிய நேரத்தில் நீங்கள் காலை உணவு சாப்பிடாத போது வயிறு பயப்படுகிறது.
2. 24 மணிநேரத்தில் 10 டம்ளர் தண்ணீர் கூட குடிக்காத போது சிறுநீரகம் பயப்படுகிறது.
3. இரவு 11 மணி வரை தூங்காமல் விழித்திருந்து, சூரிய உதயம் ஆகும்போது விழிக்காதிருக்கும் போது பித்தப்பை பயப்படுகிறது.
4. ஆறிப்போன, பழசாகிப் போன உணவுகளைச் சாப்பிடும் போது சிறுகுடல் பயப்படுகிறது.
5. நிறைய வறுத்த மற்றும் காரமான உணவுகளைச் சாப்பிடும் போது பெருங்குடல் பயப்படுகிறது.
6. சிகரெட் மற்றும் பீடி போன்ற புகை, அழுக்கு மற்றும் மாசடைந்த சுற்றுச்சூழல் காற்றை நீங்கள் சுவாசிக்கும்போது நுரையீரல்கள் பயப்படுகின்றன.
7. அதிகப்படியான வறுத்த உணவு, ஜங்க், துரித உணவுகளை உண்ணும் போது கல்லீரல் பயப்படுகிறது.
8. அதிக உப்பு மற்றும் அதிக கொலஸ்ட்ரால் நிறைந்த உணவைச் சாப்பிடும் போது இதயம் பயப்படுகிறது.
9. சாப்பிடச் சுவையாகவும் மற்றும் தடையின்றி கிடைக்கிறது என்பதாலும் அதிக இனிப்புப் பண்டங்களை வெளுத்து வாங்கும்போது கணையம் பயப்படுகிறது.
10. இருட்டில் மொபைல் மற்றும் கம்ப்யூட்டர் திரையின் வெளிச்சத்தில் வேலை செய்யும்போது கண்கள் பயப்படுகின்றன.
11. எதிர்மறை (நெகடிவ்) எண்ணங்களைச் சிந்திக்க ஆரம்பிக்கும் போது மூளை பயந்து போகிறது.



# கங்கை கொண்டான்

கங்கைவரை வரை வென்று தலைநகர் கங்கை கொண்ட சோழபுரத்தை அமைத்த கலைநயச் சோழர்.!

தன்னிகரில்லா கடற் படை கொண்டு கடாரம் வரை வென்ற சோழேந்திர சிம்மன்.!

தமிழரின் புகழையும் வீரத்தையும் வானுயரச் செய்த பாரக்கிரம சோழன்..!

இப்படி ஆயிரம் ஆண்டுகள் கழித்தும் போற்றும் பல வெற்றிகளை குவித்து அறநெறியில் பொற்கால ஆட்சி செய்த  பொன்னியின் செல்வனின் புகழ் மைந்தன்..!

இராசேந்திர சோழன் தலைமையில் சோழப் பேரரசு ஆழ்கடலைக் கடந்து தென்கிழக்கு ஆசியா வரை தங்களது அரசாட்சியை விரிவுபடுத்தியது.

இராசேந்திர சோழன் ஆட்சிக்காலத்தில் சோழநாடு; இந்தியா, இலங்கை, மாலத்தீவு, கடாரம், சிரீவிசயம், மலேயா (சிங்கப்பூர் - மலேசியா), சுமத்ரா, தாய்லாந்து, கம்போடியா, இந்தோனேசியா, மியான்மர், வங்கதேசம் ஆகியவற்றை உள்ளடக்கிய மிகப்பெரிய நிலப்பரப்பாக இருந்தது.

தமிழர்களின் புகழைப் பரப்பிய இந்த மாபெரும் மன்னன், இராசேந்திர சோழனே முதன் முதலில் அயல்நாட்டிற்குப் கடல்கடந்து பெரும் படை எடுத்துச் சென்ற முதல் தமிழ் மன்னன் ஆவார்.

தமிழரின் கடல் கடந்த வீரத்துக்கு ஓர் அடையாளமாகத் திகழ்கிறார்.

இதற்கான முக்கியமான சான்றாக, இன்றைய தாய்லாந்தில் உள்ள Nakhon Si Thammarat நகரம், அந்நாளில் சோழர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. (நகர ஸ்ரீதர்மராஜ என்பதிலிருந்து தாய் மொழியில் Nakhon Si Thammarat என்று மருவியது.

இந்நகரம் பண்டைய தமிழர் வர்த்தக நிலையமாகவும் விளங்கியது. இதன் வழியாக தமிழ் பண்பாடும் மொழியும் பரவியது.

இவ்வாறான வரலாற்று பிணைப்புகளின் அடிப்படையில், இன்று தாய்லாந்தில் இயங்கும் தாய்லாந்து தமிழ்ச்சங்கம், தமிழ் மொழி, கலாசாரம், மற்றும் சமூக ஒருங்கிணைப்பை பேணிக்காக்கும் பணியில் செயல்பட்டு  வருகிறது.  தென்கிழக்கு ஆசியா முழுவதும் தமிழர் வீரத்தை நிலைநாட்டிய தமிழ் மன்னன் இராசேந்திர சோழன்!

சாதனைகள் பல புரிந்த இராசேந்திர சோழன் ஒரு நகரையும், கோயிலையும், ஏரியையும் படைத்தது பயன்பாடு கருதியது ஆகும்.  சோழர் கடற்படை மலேயா, சுமத்ரா, ஜாவா, ஆகிய பகுதிகளை வென்றது. முதலில் நிகோபார் தீவுகளும், பிறகு மலேயாவின் கடே எனப்படும் கடாரம், மற்றும் சுமத்ரா, ஜாவா ஆகியனவும் வெல்லப்பட்டன.  இவ்வெற்றிகள் வட இந்திய அரசர்களைப் போல அசுவமேத யாகம் செய்வதற்காக



அல்ல. இதில் பொருளியல் நோக்கமும் இருந்தது. இராசேந்திரன் காலத்தில் தமிழர் வணிகம் செழித்தது. கடல் கடந்த நாடுகளிலும், விரிந்த கடற்பரப்பிலும், வலிமையான கடற்படை கொண்டு தமிழ் வணிகர்களுக்குப் பாதுகாப்பை உறுதி செய்தான்.

இன்றைக்கு இலங்கை கடற்படையால் 800க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். நாம்மால் ஏதும் செய்யமுடியவில்லை.

ஆனால் தென்கிழக்கு, ஆசியா மற்றும் மேற்கு கடற்பகுதியில் தமிழக மீனவர்களோ, வணிகர்களோ எவ்வித அச்சத்திற்கும் ஆளாகத் தேவையில்லா நிலையை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இராசேந்திர சோழன் உறுதிப்படுத்தினான்.

வரலாற்று ரீதியாக பொக்கிஷம் திருவலஞ்சுழி சடைமுடிநாதர் கோவில். ராஜேந்திரன் சோழன் சிற்கலை வணங்கிய நிலையில் தந்தை இறந்த பிறகு வயதான தோற்றம் கொண்ட சிலையை வடிவமைத்து சோழர்களின் முன்னோர்கள் வழிபாடு கோவிலாக கருதப்படுகிறது.

சோழ தேசத்தின் ஆணி வேர் பழையாறை, முன்பு திருவலஞ்சுழி சடைமுடிநாதர் கோவில். விஜயாலய சோழன் காலத்தில் முற்கால சோழர்கள் வழிபாடு ஷேத்திரபாலகர் ஏகவீரி கொற்றவை காளி தேவி. இதற்கான கல்வெட்டு சான்றுகள் உத்திரமேரூர் தாண்டி 100 கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

இராசேந்திர சோழப் பேரரசின் புகழ், நமக்கெல்லாம் என்றும் பெருமையாகவே இருக்கும்.

# தமிழா! விழித்துக் கொள்..

விரைவில் தமிழ்நாட்டை பூர்வீகமாக கொண்டவர்கள் பொருளாதாரத்தில் மிகவும் பாதிக்கப்படுவார்கள்...! அன்று புரியும்.

ஹார்டுவேர், பெயின்டர்கள் கார்பெண்டர், பெரிய ஆள் ஹெல்பர்கள், பட்டர்கள், டெயிலர்கள், மேஸ்திரிகள். முக்கிய தொழிலாக ஹோட்டல்கள், ஹோட்டல்களில் வேலை செய்பவர், மாஸ்டர்களே இப்பொழுது வட நாட்டவர் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். எல்லா தரப்பட்ட உடல் உழைப்பு தரும் ஆட்கள். தாம்பரத்தில் முக்கிய ஹோட்டலில் தோசை மாஸ்டர் வட நாட்டவர். அவரிடம் பேசினோம். அவர் சொன்ன விவரங்களுக்கு தலை கிறுகிறுத்தது.

மாதம் மாதம் ரூ.10,000/- ஊருக்கு அனுப்புகிறேன் என்று அந்த வடமாநிலத்து தொழிலாளி சொன்னார். அப்படியா என்று கேட்டு விட்டு வந்து விட்டேன். வந்த பின் தான் யோசித்தேன். இந்த ஒருவர் மாதம் ரூ.10,000 அனுப்புகிறார்.

இப்படி 10 பேர் அனுப்பினால் ஒரு லட்சம். நூறு பேர் அனுப்பினால் ஒரு கோடி. ஆயிரம் பேர் அனுப்பினால் பத்து கோடி. ஒரு லட்சம் பேர் அனுப்பினால் ஆயிரம் கோடி. மனம் அதிர்ச்சியடைந்தது.

முதலில் இவர்களின் கூட்டம் தமிழகத்தில் எவ்வளவு இருக்கிறது..? என குத்துமதிப்பாய் கணக்கு எடுப்போம் என பலரிடம் கேட்டேன். தொழில் நகரங்களான பெரும் நகரங்களில், மாவட்ட அளவில், உதாரணத்திற்கு திருப்பூரில் 3 லட்சம் பேரும், கோவையில் 7 லட்சம் பேரும், சென்னையில் 20 லட்சம் பேரும் இருப்பார்கள் என சொன்னார்கள். அப்போ சேலம், ஈரோடு போன்ற இன்ன பிற மாவட்டங்களில் எவ்வளவோ தெரியாது என்றார்கள்.

அதிர்ச்சியில் உறைந்து போன நான். சென்னை, கோவை, திருப்பூர் மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்வோம் என முடிவெடுத்து, கணக்கு பார்த்தேன். மொத்தம் 30 லட்சம் பேர். ஒருவர் மாதா மாதம் பத்தாயிரம் என்றால் 30 லட்சம் பேருக்கு கணக்கு போட்டேன். 3,000 கோடி எனக் காட்டி விட்டு கால்குலேட்டரே தன்னை காலாவதியாக்கிக் கொண்டது. மாதா மாதம் 3000 கோடி என்றால், வருடத்திற்கு 36000 கோடி.

இது அனைத்தும் தமிழ்நாட்டில் புழக்கத்தில் இருந்தால் அந்த சிறு பணம் புழக்கம் கொண்டு, தமிழக மக்களையும், சிறு, குறு வியாபாரிகளை வளமாக வாழ வைக்க வேண்டிய இந்தப்பணம், வடமாநிலங்களில் புழங்கிக் கொண்டுருக்கிறது. அங்கே இருக்கும் மக்களையும், வியாபாரிகளையும் வாழவைத்துக் கொண்டிருக்கிறது.

இது வெறும் தமிழகத்தின் 3 மாவட்டங்களின் கணக்கு. மீதம் இருக்கும் 36 மாவட்டத்திலும், வட மாநில தொழிலாளிகளை குத்துமதிப்பாய் கணக்கெடுத்து கூட்டிப் பார்த்தால் தலை சுத்தி, மயக்கம் வந்து, மூர்ச்சையாகி இறந்தாலும் இறந்து விடுவோம்.

இது வட மாநிலத் தொழிலாளர்கள் கணக்கு. இன்னும் வடமாநில சுய தொழில் செய்யும் வியாபாரிகள், முதலாளிகள் போன்றோர்களை கணக்கெடுத்து, அவர்கள் ஈட்டும் வருமானங்களை கூட்டிக் கழித்துப் பார்த்தால் அய்யய்யோ நினைத்து பார்க்க முடியவில்லை.

இன்னொரு பிரச்சினை. பணப்புழக்கம் இல்லாமல் இருக்கும் காரணம், கைத்தொழில். எல்லாவகையான சிறு பொருட்கள் சீனாவிலிருந்து இறக்குமதி ஆகிறது. அதனால் லட்சக்கணக்கான பொருட்கள், அதாவது உளி, சுத்தியல் ஆரம்பித்து மருத்துவர் போடும் ஊசி வரை. அப்போது ஏற்கெனவே இங்கு இருந்த இந்த தொழில் அது ஒரு தனி கதை.

சத்தமின்றி, யுத்தமின்றி தமிழன் சாராயத்தாலும், உழைப்பில்லாமலும் இந்த மாபெரும் பொருளாதார போராட்டத்தில் அழிக்கப்பட்டுக் கொண்டு இருக்கிறான் என்பதை மட்டும் உணர முடிகிறது. இதை தமிழன் எப்போது உணர்வது?

மிகவும் கொடுமையானது. ஆனால் நம்பி ஆகவேண்டிய உண்மை விவரம். பயிர் தொழில் இப்போது கொஞ்சம் கொஞ்சமாக வட நாட்டவர் கைகளில் சென்று கொண்டுள்ளது, களை எடுத்தல், அறுப்பு அறுத்தல், மருந்து அடித்தல் என வர ஆரம்பித்து விட்டார்கள். இனி என்னாகும்?

யோசியுங்கள். பட்டாலும், கெட்டாலும் வருந்தாத, திருந்தாத முட்டாள்கள் இருக்கும் வரை இந்த அவல நிலை தொடரும். தமிழா.. இதையெல்லாம் நீ உணர்ந்து விழிக்கும் போது உன் பொருளாதார வளம் வறண்டு இருக்கும் அல்லது மாண்டு இருக்கும். இதில் சில பிழைகள் இருக்கலாம். ஆனால், இக்கருத்தில் பெரும் உண்மை உள்ளது.

தமிழ் சமுதாயம் இனி பிழைக்குமா? தழைக்குமா?

சினிமா, அரசியல், ஜாதி, மொழி, இனம், மறந்து முன்னேற்றம் ஒன்றே லட்சியமாக கொண்டு உழைத்தால் உயர வாய்ப்பு இன்னும் உள்ளது.

விழித்துக் கொண்டால் பிழைத்துக் கொள்வாய். இல்லையென்றால் அழிவை நோக்கி நிச்சயம் தமிழகம். நாளைய தமிழகத்தை எண்ணி என்ற ஒரு சிறிய பதிவு உண்மையென்றால் அனைவரும் சிந்தியுங்கள்.. நன்றி.

தேர்தல் அன்று ஓட்டுக்காக கிடைக்கும் பணமும் பிரியாணியுமே தமிழனை இந்த நிலைக்கு கொண்டு வந்துள்ளது என உணர வேண்டும்.

## எனது பிறந்த நாளன்று வாழ்த்து தெரிவித்ததோடு, அன்னமிட்டும், நலத்திட்ட உதவிகள் வழங்கிய சொந்தங்களை வணங்குகிறேன்.

## நன்றி! நன்றி!! நன்றி!!!





# நாகப்பட்டினம் மாவட்ட SP திரு.S.செல்வக்குமார் IPS அவர்கள் தலைமையில் காவல்துறை குற்றத்தடுப்பு கலந்தாய்வு கூட்டம்

நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள அனைத்து காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களுக்கான மாதாந்திர ஆய்வு கூட்டம் மாவட்ட காவல் அலுவலகத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.S.செல்வக்குமார் IPS அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்டத்தில் உள்ள அனைத்து வழக்குகளின் புலன் விசாரணை குறித்தும், நிலுவையில் உள்ள வழக்குகள் குறித்தும், சாராயம், கஞ்சா மற்றும் புகையிலை போன்ற போதைப்பொருட்கள் கடத்தல் மற்றும் விற்பனையில் ஈடுபடுபவர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்வது குறித்தும், பொது அமைதிக்கு பங்கம் விளைவிப்பவர்கள் மீதும் ரவுடிகள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள்




குறித்தும், நீதிமன்ற அலுவல்கள் குறித்தும் மற்றும் பல்வேறு நிகழ்வுகள் குறித்தும் ஆய்வு நடைபெற்றது.

இணை ஆசிரியர்: P.மதனகோபால்,
நாகப்பட்டினம்





செய்திகள் மற்றும் விளம்பரங்கள் அனுப்ப:
editorpoliceparvai@gmail.com
செயல் அலுவலகம்: 14, 2-வது மாடி, எண்.4, MRG காம்ப்ளக்ஸ், போலீஸ் ஸ்டேஷன் அருகில், மெயின்ரோடு, எடமலைப்பட்டிபுதூர், திருச்சி - 620 012. 9789491438



## பெருவுடையார் கோவில்

# கண் கலங்க வைக்கும் சரித்திர உண்மை கதை

பேரரசன் ராஜராஜசோழனின் அரண்மனை. ஒருநாள் மன்னனைப் பார்த்து 'சோழப்பேரரசே கோவிலுக்காக கொடுத்த நன்கொடைகள் ஏராளம். இருந்தாலும், உங்கள் திருமுகத்தில் தீராத கவலை படிந்திருக்கிறதே என்ன காரணம்?' என்றார் அமைச்சர்.

மன்னர் கண்மூடி யோசித்தார். நெடுங்காற்றை உள்வாங்கி சீராக மூச்சுவிட்டார். கண் திறந்தார். நிதானமான குரலில் பேசத்தொடங்கினார்.

'சோழப்பேரரசின் அடையாளம் இந்தப்பெருவுடையார் கோவில். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கும் அழியக்கூடாது என்று தான் கவலைப்படுகிறேன். அரண்மனைகள் தனிச்சொத்து, ஆலயங்கள் மக்கள் சொத்து என்று கருதப்படுமாயின் மக்களுக்கும் இதில் பங்கிருக்க வேண்டும். சோழமண்டலத்தில் கடைக்கோடியில் சிற்றூரில் வாழும் மக்களும் இந்த ஆலயத்தின் பங்குதாரர்களாக மாற்றிவிடும் திட்டத்தைத்தான் சிந்தித்து கொண்டிருக்கிறேன்' என்றார்.

திட்டம் என்ன மன்னா? அமைச்சர் கேட்டார்.

அதோ, அந்த திருவிளக்குகள் செல்வந்தர்களின் நேர்த்தி கடன்களால் எரிகின்றன. தினந்தோறும் கோவில்களில் தீபங்கள் எரிய வேண்டும். அதற்காக ஆடுகளையும், மாடுகளையும் ஏழைகளுக்கு வழங்கப் போகிறேன். அதற்குப்பதிலாக அவர்கள் திருவிளக்குகள் எரிய நெய் தந்தால் மட்டும் போதும். மொத்த வருமானமும் அவர்களுக்கே. அதாவது ஏழையின் அடுப்பும், ஆலயத்தின் திருவிளக்கும் ஒரே திரியில் எரியும். இந்த ஆலயத்தோடு அடித்தட்டு மக்களுக்கு உறவு மேம்படும். இதுதான் என் திட்டம், சரியா?' என்றார்.

'மிகச்சரியானது மன்னா' என்று வணங்கினார்.

அரசன் ஆணை பிறப்பித்தான். 'சென்றிடுவீர் எட்டுத்திக்கும். கால்நடைகளை ஏழைகளுக்கு பகிர்ந்து கொடுங்கள். எந்த நிலையிலும் நிபந்தனை வழங்காது கட்டுப்பாடு வகுத்து கண்காணியுங்கள் என்றான்.

ஒருநாள் கோவில்களை சுற்றி வரும் பொழுது ஒரு கோவிலில் மட்டும் விளக்கு எரியவில்லை. காரணம் கேட்டறிந்தார்.

எவத்தூர் மாராயன் என்பவனுக்கு 42 பசு மாடுகள் வழங்கப்பட்டுள்ளன. அவனுடைய கட்டுப்பாட்டில் எரிய வேண்டிய விளக்கு கடந்த ஏழு நாட்களாக எரியவில்லை என்பதை அறிந்தார்.

'எவனவன், இறைவன் கட்டளையை நிறைவேற்ற மறுப்பவன். பூட்டுங்கள் தேரை, ஓட்டுங்கள் எவத்தூருக்கு' என்றான்.

காலி மனையால் சூழப்பட்ட ஒரு குடிசையின் முன் மன்னரின் தேர் நின்றது. 'பேரரசன் வந்திருக்கிறேன், மாராயா வெளியே வா' என்று குரல் கொடுத்தார்.

உள்ளே ஒரு பெண்ணின் விசும்பலும், குழந்தையின் அழுகுரலும் கேட்டது. சற்று நேரத்தில் கதவைத்திறந்து கசங்கிய சேலையும், கலைந்த கூந்தலும், கலங்கிய கண்களுமாய் பெண்ணொருத்தி வெளியே வந்தாள். அவளது இடுப்பில் நாராய் தொங்கிக் கொண்டிருந்தது, சவலை பாய்ந்த குழந்தை ஒன்று. பேரரசரை கண்டதும் அஞ்சி நடுங்கி கீழே விழுந்தாள்.

'எழுந்திரு பெண்ணே! நீ யார்?'

'நாந்தாங்க மாராயன் பொஞ்சாதி'

'உன் கணவன் எங்கே?'

'என் புருஷனும், ராசா கொடுத்த மாடுகளும் போன மாசம் காவிரி வெள்ளத்தில் ஆத்தோடு போயிருச்சி...'

அவள் சொல்வது மெய்யா என்பது போல திரும்பிப்பார்த்தார். ஆம்! என்று வருத்தத்தோடு தலை அசைத்தனர் பொதுமக்கள்.

'உனக்காக வருந்துகிறேன். ஆனால் ஒரு கேள்வி. கடந்த மாதம் இறந்தார் என்கிறாய். ஏழு நாட்களுக்கு முன்பு வரை திருவிளக்கு எரிந்திருக்கிறது. கணவனும், மாடுகளும் இறந்தபின் இருபத்து மூன்று நாட்கள் எப்படி நீ விளக்கு எரித்தாய்?'.

அவள் தேம்பித் தேம்பி அழுதாள். இடுப்பில் நழுவிய குழந்தையை மார்போடு கட்டிக்கொண்டு, 'அதை மட்டும் கேட்காதீர்கள் மன்னா' என்று கண்கலங்கினாள்.

'பெண்ணே! அஞ்சாதே உண்மையைச் சொல்'.

'சொல்கிறேன் மன்னா! புருஷன் செத்துப் போயிட்டாலும் ராசாவுக்குக் கொடுத்த வாக்கை மீறக்கூடாது பாருங்க. அதனால என் தாய்ப்பாலை விற்று மூணு ஆளாக்கு நெய் வாங்கி தீபத்தை எரிய வச்சேன். ஒரு வாரமாய் தாய்ப்பால் வத்திப்போச்சு, திரு விளக்கு அத்துப்போச்சு. எங்களை மன்னிச்சிருங்க மகராசா' என்று குழந்தையோடு தேரின் காலடியில் விழுந்தாள்.

நடந்ததை அறிந்த பெருமூச்சுவிட்ட மன்னன் ராஜராஜன் துடிதுடித்துப்போனான். கண்கள் கலங்கியது தேகம் சிலிர்த்தது.

தேரைவிட்டு கீழிறங்கி தாயையும் குழந்தையையும் சேர்த்தெடுத்து 'உன்னைப் போன்றவர்களால் தான் பெருமை அடைகிறது என் சோழப்பேரரசு. இன்று முதல் இந்தத்தாயை திருமஞ்சனப் பணிப்பெண்ணாக நியமிக்கின்றேன். அரண்மனை சிற்பியை அழைத்து "தாய்ப்பாலால்"விளக்கெரித்த இவள் பெயரை கல் வெட்டில் பொறித்து விடுங்கள்' என்றான்.



# சிறப்பாக பணிபுரிந்த காவலர்களுக்கு SP திரு.G.சந்தீஷ் IPS அவர்கள் பாராட்டு

இராமநாதபுரம் மாவட்டம் கமுதி அருகே நல்லுக்குமார் என்பவரை கொலை செய்த வழக்கில் 2 குற்றவாளிகளை, அதே பகுதியில் மெத்தபெட்டமைன் எனும் போதைப் பொருள் வைத்திருந்த 2 குற்றவாளிகளை மற்றும் சாயல்குடி பகுதியில் ஜெர்மின் என்பவரை கொலை செய்த வழக்கில் அவரது கணவர் உட்பட 7 குற்றவாளிகளையும் தீவிர விசாரணை மேற்கொண்டு, மிக விரைவாக கைது செய்து சிறப்பாக பணிபுரிந்த சார்பு ஆய்வாளர் மற்றும் காவலர்கள் உட்பட 16 நபர்களை, காவல் கண்காணிப்பாளர் திரு.G.சந்தீஷ் IPS அவர்கள் நேரில் வரவழைத்து வெகுமதி வழங்கி பாராட்டினார்கள்.

நிருபர்: R.செந்தில்குமார், இராமநாதபுரம்.



---






# இஷ்டப்பட்டு தேடு

**கஷ்டப்பட்டு தேடப்படுகிறது செல்வம்..**
**கவலையுடன் பாதுகாக்கப்படுகிறது..**
**துக்கத்துடன் இழக்கப்படுகிறது..**
**கஷ்டப்பட்டு தேடினால்**
**கிடைப்பது செல்வம்..**
**இஷ்டப்பட்டு தேடினால்**
**கிடைப்பது நிம்மதி..**

ஆசிரியர் Dr.N.பாலகிருஷ்ணன்



**தென்காசியில் டீக்கடை அருகே கண்டெடுத்த தங்கச் செயினை**

# SP திரு.S.அரவிந்த் அவர்கள் முன்னியில் உரியவர்களிடம் ஒப்படைத்த தலைமை காவலர்

தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருபவர் திரு.சுடலைகண்ணு அவர்கள். பணி நிமித்தமாக தென்காசி வந்துவிட்டு மீண்டும் வாசுதேவநல்லூர் செல்லும் வழியில், தென்காசியில் உள்ள ஒரு டீக்கடைக்கு சென்ற போது, அங்கு கீழே தங்க செயின் ஒன்று கிடந்துள்ளது. அதனை எடுத்த தலைமைக் காவலர், செயின் உரிமையாளர் யாரேனும் இங்கே வந்தால் எனது எண்ணில் தொடர்பு கொள்ள கூறுங்கள் என்று கடையின் உரிமையாளரிடம் கூறிவிட்டு வந்துள்ளார்.

பின்னர், சிறிது நேரம் கழித்து செயினை தவறவிட்டவர்கள் வந்தவுடன், அவர்களை மாவட்ட காவல் அலுவலகம் அழைத்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.S.அரவிந்த் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.சங்கர் அவர்கள் முன்னிலையில் உரிமையாளரிடம் தங்க செயின் ஒப்படைக்கப்பட்டது.

செயினை பெற்றுக்கொண்ட அதன் உரிமையாளர் காவலருக்கு தனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டார். பின்னர் நேர்மையான முறையில் கீழே கிடந்த தங்க செயினை உரிய நபரிடம் ஒப்படைத்த தலைமைக் காவலரை பாராட்டும் விதமாக அவருக்கு சால்வை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

நிருபர்: V.ஆறுமுகச்சாமி, தென்காசி



## நகை வாங்க போறீங்களா !
## அப்ப, இத படிங்க..

# இன்னும் எத்தனை காலம் தான், ஏமாற்றுவார் இந்த நாட்டிலே..

ஒரு பவுன் தங்கசெயினுக்கு 1.5 கிராம் செம்பு சேர்த்தால் மட்டும் நகை செய்ய முடியும்! இது அனைவருக்கும் தெரிந்தது. ஆனால், 8 கிராம் தங்கத்தில் 1.5 கிராம் கழித்தது போக 6.5 கிராம் நகை செய்யப்படுகின்றது.

ஆனால் சாமானியன் நகை வாங்கும்போது 6.5 தங்கம் + 1.5 செம்பு இரண்டும் சேர்ந்து 8 கிராம் தங்கமாக பில்லில் போடுகின்றார்கள்.



அதுமட்டுமின்றி அதற்கு மேலாக சேதாரம் என்று கூறி மேலும் 1.5 கிராம் செம்பை தங்கம் சேர்க்கப்பட்டதாக கூறி செம்பை தங்க விலைக்கு விற்கின்றார்கள். இதில் நான் சொல்லுவது என்ன 6.5 தங்கம் + 1.5 செம்பு (தங்கமாக) + சேதாரம் செம்பு 1.5 = 9.5 கிராம்.

ஆக 1 பவுன் நகை வாங்குபவர்கள் வெறும் 6.5 கிராம் தங்கத்தை மட்டும் இல்லாமல் 3 கிராம் செம்பை சேர்த்து விட்டு தங்கத்தின் விலையை போட்டுவிடுகின்றார்கள். ஆக 1 பவுன் 8 கிராம் நகைக்கு 9.5 கிராமுக்கு நாம் பணம் கட்டுகின்றோம். யாரை ஏமாற்றுகின்றார்கள் நகைக் கடைகாரர்கள்.

ஏழைகளை ஏமாற்றி ஏழைகளின் இரத்தத்தை ஒட்டுண்ணிகளாக உறிஞ்சி எடுத்துக் கொண்டு இருக்கின்றார்கள்.

ஒருவர் ஒரு புதிய நகைக்கடை திறக்கின்றார் என்றால் ஒரு சில வருடத்தில் பல மாடிகளும் பல ப்ளாட்டுகளையும் வாங்கி குவிக்கின்றார்கள் என்றால் பணம் எப்படி வந்தது?

நான் மேலே சொன்ன கணக்குதான் உண்மை...!

இன்று ஒரு கிராம் தங்கத்தின் விலை என்ன?

பவுனுக்கு 3 கிராம் என்று வசூல் செய்யும் போது ஒரு கிராம் செம்பின் விலை என்ன?

கணக்கு போட்டு பாருங்கள்...

6.5 கிராம் தங்கம் + 1.5 கிராம் செம்பு
அடக்க விலை 59,540 + 7.2 = 59547.2
1 பவுனுக்கு தங்கத்தில் 73,280 - 59,540
லாபம் = 13740
சேதாரம் 1.5 கிராம் 13,740/-
1 பவுனுக்கு மொத்த லாபம் 26,000 மேல்.

என்ன தலை சுத்துதா ? எனக்குள் இது ஆதங்கம். ஆனால் இந்த விழிப்புணர்வை மக்கள் எப்போது உணர்கின்றார்களோ அன்று தங்கத்தின் விலை கண்டிப்பாக குறையும்.

## திருநெல்வேலி சைபர் க்ரைம் காவல்குழுவினரால் மீட்கப்பட்ட

# செல்போன்களை உரியவரிடம் ஒப்படைத்த SP திரு.N.சிலம்பரசன் IPS அவர்கள்







திருநெல்வேலி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.N.சிலம்பரசன் அவர்களின் நேரடி கண்காணிப்பில் சைபர் கிரைம் பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.P.P.முருகன் அவர்களின் மேற்பார்வையில் காவல் ஆய்வாளர் திருமதி.V.ரமா அவர்களின் தலைமையில் திருநெல்வேலி மாவட்டத்தில் செல்போன்கள் தொலைந்து போனதாக பெறப்பட்ட புகார்களின் அடிப்படையில், 100 செல்போன்கள் மீட்கப்பட்டது.

மீட்கப்பட்ட செல்போன்களஅ திருநெல்வேலி SP திரு.N.சிலம்பரசன் அவர்களால் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இவற்றின் மதிப்பு ரூ.18,18,873.

மேலும் காணாமல்போன(அ)தவறவிட்ட செல்போன்கள் தொடர்பாக புகார் அளிக்க CEIR- Central Equipment Identity Register https://www.ceir.gov.in/ இந்திய தொலைத் தொடர்பு துறையால் பிரத்யேகமாக உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த இணையதளத்தில் புகார் செய்வோர் தனது தொலைந்துபோன (அ) தவறவிட்ட செல்போன் தொடர்பான விவரங்களை பதிவு செய்து புகார் அளிக்கலாம், அல்லது காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட மனு ரசீது பதிவு செய்து புகார் அளிக்கலாம்.

இவ்வாறு புகார் கொடுத்தபின் மனுதாரர் செல்போன் வேறு ஒருவரால் பயன்படுத்த முடியாதவாறு பிளாக் செய்யப்படும். மேலும் மனுதாரர் செல்போனில் புதிதாக சிம்கார்டு பயன்படுத்திய விபரங்கள் தொடர்பான அறிவிப்பு மனுதாரருக்கு உடனடியாக அனுப்பப்படும். காணாமல் போன செல்போனை பயன்படுத்தி பல குற்றங்கள் செய்ய வாய்ப்பு உள்ளதால் தொலைந்த (அ) காணாமல் போன செல்போன் குறித்து உடனே அருகில் உள்ள காவல் நிலையத்தில் புகாரளித்தால், தொலைந்து போன (அ) உடனடியாக தவறவிட்ட செல்போனை மீட்க முடியும் என பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மேலும் சைபர் குற்றங்கள் தொடர்பாக பொதுமக்கள் பாதிக்கப்பட்டால் உடனடியாக 1930 என்ற இலவச எண்ணை தொடர்பு கொண்டு புகார் அளிக்கலாம் (அ) https://cyber-crime.gov.in/ என்ற இணைய தளத்தில் புகார் அளிக்கலாம்.

நிருபர்: ஜோதிபாசு, திருநெல்வேலி

செய்திகள் மற்றும் விளம்பரங்கள் அனுப்ப:

editorpoliceparvai@gmail.com

செயல் அலுவலகம்: 14, 2-வது மாடி, எண்.4, MRG காம்ப்ளக்ஸ், போலீஸ் ஸ்டேஷன் அருகில், மெயின்ரோடு, எடமலைப்பட்டிபுதூர், திருச்சி - 620 012. ✆ 9789491438

## குறைந்த செலவில் விளம்பரம் செய்து அதிகமான வாடிக்கையாளர்களை ஈர்த்திடுங்கள்...




| | | |
|---|---|---|
| கலர் பின் அட்டை முழு பக்கம் | - | ரூ.20,000 |
| கலர் பின் அட்டை உள் பக்கம் | - | ரூ.18,000 |
| முன் அட்டை உள் பக்கம் முழு பக்கம் | - | ரூ.18,000 |
| முன் அட்டை உள் பக்கம் அரை பக்கம் | - | ரூ.9,000 |
| மற்ற பக்கங்களின் உள்ளே முழு பக்கம் | - | ரூ.9,000 |
| மற்ற பக்கங்களின் உள்ளே அரை பக்கம் | - | ரூ.6,000 |

செயல் அலுவலகம்:

14, 2-வது மாடி, எண்.4, MRG காம்ப்ளக்ஸ், போலீஸ் ஸ்டேஷன் அருகில், மெயின்ரோடு, எடமலைப்பட்டிபுதூர், திருச்சி - 620 012.

9789491438

E_Book: www.policeparvai.com


# திருச்சி ஏடிஎம்-ல் வெளிவந்திருந்த பணத்தை காவல் நிலையத்தில் ஒப்படைத்த மாணவர்

## நேரில் அழைத்து பாராட்டிய SP திரு.S.செல்வநாகரத்தினம் IPS அவர்கள்



திருச்சி மாவட்டம் பெட்டவாய்த்தலை காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் பெண் ஒருவர் ஏடிஎம் (ATM)-ல் பணம் வரவில்லை என நினைத்து ஏடிஎம்-யை விட்டு வெளியில் வந்து வீட்டிற்கு சென்று விட்டார். இந்த நிலையில் அதே ஏடிஎம்-ல் பணம் எடுக்க வந்த கல்லூரி மாணவர் திரு.ஸ்ரீதர், ஏடிஎம் இயந்திரத்தில் வெளியில் வந்திருந்த ரூ.9000 பணம் வெளியில் வந்திருப்பதை கண்டு, அந்த பணத்தை அருகில் இருந்த பெட்டவாய்த்தலை செக்போஸ்டில் பணியில் இருந்த காவலர்களிடம் ஒப்படைத்தார்.

செக்போஸ்டில் பணியில் இருந்த தனிப்பிரிவு காவலர் திரு.முத்துசெல்வன், பேட்டைவாய்த்தலை காவல் நிலைய காவலர் திரு. செல்வமணி ஆகியோர் கல்லூரி மாணவர் ஒப்படைத்த பணத்தை தவறவிட்ட பெண்மணி யார் என்பதை சிசிடிவி உதவியுடன் கண்டறிந்து அந்த பணத்தை அவரிடமே ஒப்படைத்தனர்.

கல்லூரி மாணவர் ஸ்ரீதரின் இச்செயலினை பாராட்டி திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.S.செல்வநாகரத்தினம் IPS அவர்கள் மாணவனை நேரில் அழைத்து பாராட்டுகளை தெரிவித்தார்.

தலைமை நிருபர்: N.ராக்கேஷ்சுப்ரமணியன்,
திருச்சி



## விஷ நீக்கு முத்திரை
### (சம்மணமிட்டு இரு கைகளாலும் செய்க)

ஒவ்வொரு கையிலும் பெருவிரலின் முனையை மோதிர விரலின் மூன்றாம் அங்குலாஸ்தியில் வைக்கவும். மற்ற விரல்களைத் தளர்வாக நீட்டிக் கொள்ளவும். இம்முத்திரை உடலில் சேர்ந்துள்ள மலம், சிறுநீர், சளி, அசுத்த ரத்தம், பித்தம், காதுக்குறும்பி, கண்கோழை, வியர்வை உள்ளிட்ட அனைத்து கழிவுகளையும் அகற்றி அவ்வுறுப்புகளை சுத்தம் செய்கிறது. மனதிலுள்ள கெட்ட எண்ணங்களை அகற்றி தூய்மையான புனிதமான எண்ணங்களை உருவாக்குகிறது.

# நீ வணங்குவது எதனை?

சுடுகாட்டில் பாடப்படுவது திருவாசகம் மட்டுமே ஏனெனில் சுடுகாட்டிலும் உனக்கு துணையாக இருக்கும் ஒரே தெய்வம் சிவபெருமான் மட்டுமே. ‘பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் நான் தருவேன்’ என்ற பிள்ளையார் துதியை, எவனும் சுடுகாட்டில் பாட மாட்டான். ‘ஸ்கந்தர் சஷ்டி கவசம்’ என்ற முருகன் துதியை, எவனும் சுடுகாட்டில் பாடமாட்டான். ‘தனம் தரும் கல்வி தரும் ஒரு நாளும் தளர்வு அறியா மனம் தரும்’ என்ற அம்மன் துதியை, எவனும் சுடுகாட்டில் பாட மாட்டான். ‘ஹரிவராசனம் விஷ்வ மோகனம்’ என்ற ஐயப்பன் துதியை, எவனும் சுடுகாட்டில் பாட மாட்டான். அது ஏன்? ஏனெனில் சிவபெருமான் தான் இறைவன். அவனே மெய். மெய்யை போற்றி பாடுவதே, திருவாசகம். சுடுகாட்டிலும் உனக்கு துணையாக இருக்கும் ஒரே தெய்வம், சிவபெருமான் மட்டுமே.

நீ, கடவுள் என்று நம்பிய எதுவும் சுடுகாடு வரை வாராது. சுடுகாடு வரை வருவது, சிவபெருமான் மட்டும் தான். ஏனெனில், அவன் மட்டுமே இறைவன் இந்த பிறவியில், சிவபெருமான் தான் இறைவன் என்று உன்னால் உணர முடியவில்லை என்றால், உனக்கு மறுபிறவி நிச்சயம். சிவபெருமான் தான் இறைவன் என்று உணர்ந்தவருக்கு, இப்பிறவியே இறுதியாய் அமையும்.

நமக்கு வாழ்வு தந்த சிவமே மெய். நம்மை வாழ வைக்கும் சிவமே மெய். எதையோ நம்பி நீ வாழ்ந்தாலும், உன்னை வாழ வைப்பது சிவபெருமான் என்பதே மெய். மெய்யே சிவம். நாயன்மார்களும் நால்வரும் சிவனை வணங்கினர் சிவனடி சேர்ந்தனர். சிவனடி சேர, சிவனை நினைப்போம், சிவனை உரைப்போம், சிவனடி சேரவே சீவித்திருப்போம். நீ வணங்குவது எதனை? சிவனை நினை தீரும் நம் தீவினை





# எண்ணும் எழுத்தும் தந்தவர் காமராசர்

## பள்ளி விழாவில் வட்டாரக் கல்வி அலுவலர் திரு.பாலமுருகன் அவர்கள் புகழாரம்

திருப்பூர் மாநகராட்சி தொடக்கப் பள்ளி செல்லம்மாள் காலனியில் கர்மவீரர் காமராஜரின் 123-வது பிறந்தநாளை முன்னிட்டு கல்வி வளர்ச்சி நாள் கொண்டாடப்பட்டது. விழாவுக்கு, பள்ளித் தலைமை ஆசிரியர் திரு.வே.நாகராஜ் கணேஷ் குமார் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். 24-வது மாமன்ற உறுப்பினர் திரு.இரா.நாகராஜ் அவர்கள் தலைமை தாங்கினார். பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் திரு.பொன்.பழனிச்சாமி அவர்களும் பள்ளி மேலாண்மைக் குழுத் தலைவர் திருமதி.சுகிர்தா அவர்களும் முன்னிலை வகித்தனர்.

வகுப்பறை அரங்கில் நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளில், மாணாக்கர் பெருந்தலைவர் காமராசர் வேடம் புனைந்து பேச்சு, கவிதை ஒப்புவித்தல், பாடல் பாடுதல் என மிகச் சிறப்பாக செய்தனர். இலட்சுமி கார்மெண்ட்ஸ் உரிமையாளர்களான திரு.ந.சுப்ரமணி மற்றும் திரு.சௌ.சிவக்குமார் அவர்கள் 5-ம் வகுப்பு மாணாக்கர்களுக்கு சுமார் ரூ.25,000 மதிப்புள்ள தமிழ், ஆங்கில அகராதியினை வழங்கினார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் அவைத் தலைவர் திரு.ஸ்ரீதரன் அவர்கள் மாணாக்கருக்கு கடலை மிட்டாய் வழங்கினார். தமிழக வெற்றி கழகத்தின் சார்பாக மாணாக்கருக்கு ரூ.3,000 மதிப்பிலான எழுது பொருட்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய திருப்பூர் வடக்கு வட்டாரக் கல்வி அலுவலர் திரு.பாலமுருகன் அவர்கள் தன் பேச்சில் சிறந்த ஆன்மாவாகவும், விடுதலைப் போராட்ட வீரராகவும், தமிழகத்தை மிகச் சிறந்த முறையில் வழிநடத்திய தலைவராகவும் விளங்கியதோடு ஒரு தனி மனிதனுக்கு கண்ணாக இருக்கிற எண்ணையும் எழுத்தையும் 50 ஆண்டுகளுக்கு முன்னால் வழங்கியதால் கல்விக்கண் திறந்த பெருந்தலைவர் காமராசர் என்று புகழப்படுகிறார் என்று புகழாரம் சூட்டினார். ஆசிரியை திருமதி. கோ. விஜயலெட்சுமி அவர்கள் நன்றியுரை கூறினார்.

இந்நிகழ்வில் பெற்றோர்களும், பொது மக்களும், பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வினை ஆசிரியர்களும், மற்றும் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களும் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

தலைமை நிருபர்: A.மாரிராஜா, திருப்பூர்.

# IA என்றால் என்ன?

நீதிமன்ற வழக்குகளில் IA என்ற சொல், அனைவருக்கும் பரிச்சயமான ஒரு சொல். ஆனால், அதன் முழுமையான விளக்கம் என்ன என்று பெரும்பாலான மக்களுக்கு தெரியாது அதற்கான விளக்கத்தை இந்த கட்டுரையில் தெளிவாக தெரிந்து கொள்வோம்.

I.A பெட்டிஷனின் அர்த்தம் என்ன?

I.A பெட்டிஷன் எப்போது தாக்கல் செய்யப்படுகிறது?

I.A பெட்டிஷன் நீதிமன்ற நடைமுறைகள் என்ன?

இந்தியாவில் உள்ள நீதிமன்றங்களில் சிவில் வழக்குகள் தாக்கல் செய்தவர்கள் IA என்ற வார்த்தையை பல முறை கேள்விப்பட்டு இருப்பீர்கள், IA என்ற சொல்லின் அர்த்தம் என்னவென்றால், Interlocutory Application, Interim Application and Impleading Application என்று அறியப்படுகிறது.

Interlocutory Application-இடைநிலை விண்ணப்பம்

Interim Application-இடைக்கால விண்ணப்பம்

Impleading application-உள்வாங்கும் விண்ணப்பம்

I.A பெட்டிஷன் எப்போது தாக்கல் செய்யப்படுகிறது?

நீதிமன்ற வழக்குகளில் சூழ்நிலைக்கேற்ப இந்த IA மனுக்கள் தாக்கல் செய்யபடுகிறது. இதை தெளிவாக நீங்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்றால் அனைத்து I.A மனுக்களும் இடைக்கால விண்ணப்பங்கள் (இடைச்சொருகல் விண்ணப்பங்கள்) என்றே வைத்துக் கொள்ளுங்கள்.

இனி இதை பற்றி இடைக்கால விண்ணப்பம் என்றே குறிப்பிடுகிறேன் எளிதாக புரிந்து கொள்வதற்காக, இந்த இடைக்கால விண்ணப்பம் என்பது முக்கிய வழக்கு நிலுவையில் இருக்கும் போது சில இடைக்கால நிவாரணம் அல்லது நீதிமன்றத்தின் வழிகாட்டுதல்களைக் கோரி சட்ட நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள தரப்பினரால் செய்யப்படும் கோரிக்கையாகும்.

இது ஒரு குறிப்பிட்ட சிக்கலைத் தீர்க்க அல்லது உடனடி கவனம் தேவைப்படும் உத்தரவைப் பெறுவதற்கான முக்கிய நடவடிக்கைகளின் போது செய்யப்படும் விண்ணப்பமாகும்.

ஒரு சொத்தில் உரிமை யாருக்கு என்று வழக்கு நடந்து கொண்டு இருக்கும் போது வாதியோ அல்லது பிரதிவாதியோ அந்த வழக்கு சொத்தை விற்பனை செய்ய முயற்சி செய்தால் அதை தடை செய்ய உடனடியாக நீதிமன்றத்தில் தெரியப்படுத்தி தடை உத்தரவு பெற வேண்டும்.

இதற்காக வாய்மொழியாக சொல்லி உத்தரவு பெற முடியாது, அதற்காக புதிய விண்ணப்பம் தாக்கல் செய்து அதன் அடிப்படையில் உத்தரவை நீதிமன்றத்தில் பெற வேண்டும். இந்த புதிய விண்ணப்பத்தை வழக்கு நடந்து கொண்டிருக்கும் இடையில் இடைக்காலத்தில் தாக்கல் செய்வதால் தான் இதை இடைக்கால விண்ணப்பம் IA என்று அழைப்படுகிறது.



இடைக்கால விண்ணப்பங்கள், தடை கோருதல், தற்காலிக தடை (Temporary stay), பெறுநர்களை நியமனம் செய்தல் (Appointment of Receivers), மனுக்களில் திருத்தம் செய்தல் (Amendment of Pleadings), கூடுதல் ஆதாரங்களை சேர்க்க அனுமதி கோருதல் போன்ற பல்வேறு விஷயங்களைத் தீர்ப்பதற்காக தாக்கல் செய்யப்படுகின்றன.

இடைக்கால விண்ணப்பங்கள் என்பது அடிப்படையில் இது இடைக்கால நிவாரணம் பெற அல்லது ஏதேனும் ஒன்றைப் பெறுவதற்குப் பயன்படுத்தப்படும் நடைமுறை சட்ட செயல்முறை ஆகும்.

IA பெட்டிஷன் நீதிமன்ற நடைமுறைகள் என்ன?

ஒரு தரப்பினர் ஒரு இடைநிலை விண்ணப்பத்தை தாக்கல் செய்யும் போது, அது வழக்கமாக தனித்தனியாக எண்ணப்பட்டு, "IA எண், X இன் YYYY" போன்ற ஒரு தனித்துவமான தலைப்பு எண் வழங்கப்படுகிறது.

வழக்கின் தகுதி மற்றும் சூழ்நிலைகளின் அடிப்படையில் விண்ணப்பத்தை நீதிமன்றம் முடிவு செய்யும்.

நீதிமன்றம் மற்றும் குறிப்பிட்ட வழக்கை நிர்வகிக்கும் குறிப்பிட்ட சட்டங்களைப் பொறுத்து இடைநிலை விண்ணப்பங்கள் தொடர்பான குறிப்பிட்ட விதிகள் மாறுபடலாம் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

எனவே, ஒரு குறிப்பிட்ட நீதிமன்ற அதிகார வரம்பில் ஒரு இடைநிலை விண்ணப்பத்தை தாக்கல் செய்வதற்கான தொடர்புடைய விதிகள் மற்றும் நடைமுறைகளைப் புரிந்து கொள்ள ஒரு வழக்கறிஞருடன் கலந்தாலோசிப்பது நல்லது.

தகவல்: குரு.சரவணன்

Owned and Published by N.Balakrishnan from 4B, GD.Floor, 4th Block, Adilti Paradise,
No.1, 2nd North Street, Poombuhar Nagar Kolathur, Chennai-600 099. and Printed him at.Meeraoffset printers
No.104, V.R.Pillai Street, Triplicane, Chennai-600 005. Editor: **N.BALAKRISHNAN**


எங்களிடம் கன்ஸ்ட்ரக்ஷன், வீடுகள், அடுக்குமாடி
குடியிருப்புகள் தரமான முறையில் கட்டி தரப்படும்.
டிரஸ் & பெப்பிரிக்கேசன் ஒர்க்ஸ்
சிறந்த முறையில் செய்து தரப்படும்.
எங்களிடம் ரப்பிஸ், மணல் கிடைக்கும்
JCB, டிப்பர்
வாடகைக்கு
கிடைக்கும்
அயான் கன்ஸ்ட்ரக்ஷன்
-:: தொடர்புக்கு ::-
Prop: S.அன்வர்தீன் ✆ 98424 75150
10, கான்மியான் பள்ளிவாசல் தெரு, பாலக்கரை, திருச்சி- 620 008.


மாத மாதம் வருமானம் தரக்கூடிய
வீட்டு மனைகள்
கொடைக்கானல், பெரும்பாறை
APPROVED
DTCP
APPROVED
ஏலக்காய், வாழை, பலா, அவகாடோ, மிளகு,
பட்டை, கிராம்பு, காபி, பாக்கு மரம், சில்வர் ஓக்
போன்ற மரங்களுடன் சொத்து
சதுர அடி
ரூ.500
மட்டுமே
SR PROPERTIIES
REAL ESTATE, MARKETING
SR PROPERTIIES
REAL ESTAE, MARKETING
தொடர்புக்கு: ✆ 786 78 28 203, 638 298 5562

**POLICE PARVAI TAMIL MONTHLY** R.Dis.No.1132/2015 RNI. **TNTAM/2015/66520**,
Date of publication Everymonth 1st week. **Postel Registration Number TN/TBM/187/2023-25**
Posted between 8-14 Every Month. **Posted at - patrikachannel Egmore**


# RAM&CO SOLICITORS LIMITED

Regulated by the Solicitor Regulation Authority SRA NO 8000919
and Registered as a Company with company House 12385372

BEC 2, GO 1, Wakering Road, London. IG 116GN ☎ **020 350 41 891**

**Admin Office (INDIA) :**
No.151/3, 9th Cross, Ponnagar,
Trichy-620001. ☎ **0431 248 2167**
✉ info@ramsolicitors.co.uk ✆ **044 7714 23 89 24**



## LEGAL SERVICES

UK Student VISA
UK Skilled Worker VISA
UK Innovator VISA



**Business formations in UK**

**Buying & Selling Property in UK**

**Ramachandran Saravanan**
B.A.,LLB., D.L.L..,LLM (London)
Solicitor of England and Wales,
Advocate (India),


**4B, GD. Floor, 4th Block Adilti Paradise,**
**No.1, 2nd North Street, Poombuhar Nagar,**
**Kolathur, Chennai - 600 099.**
**Cell: 97 89 49 14 38, 766 755 1542**

**TO**